என்னைப் பெயேல் சேபூலினாலே பசாசுக்களைத் து
ரத்துகிறவனென்கிறீர்கள்.
19 நான் பெயேல் சேபூலைக்கொண்டு பசாசுக்களை
த் துரத்துகிறவனானால் உங்கள் பிள்ளைகள் யாரைக்
கொண்டு அவைகளைத் துரத்துகிறார்கள்? ஆகையா
ல் அவர்கள் உங்களுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கி
றவர்களாய் இருப்பார்கள்.
20 நான் பராபரனுடைய வல்லமையினாலே பசாசுக்
களைத் துரத்துகிறபடியால் பராபரனுடைய இராச்
சியம் உங்களுக்குள்ளே சடுதியாய் வந்திருக்கின்றதே.
21 ஆயுதந்தரித்த பலவான் தன் அரண்மனையின் வா
சலைக் காக்கிறபொழுது அவனுடைய பொருள் ப
த்திரப்பட்டிருக்கும்.
22 அவனிலும் அதிக பலவான் வந்து அவனைச் செ
யித்தால் அவன் நம்பியிருந்த சகல ஆயுதவர்க்கத்
தையும் பறித்துக்கொண்டு அவனுடைய உடைமை
களைப் பங்கிட்டுக்கொள்வான்.
23 என்னுடனே இராதவன் எனக்கு விரோதமாயி
ருக்கிறான். என்னைப் போலச் சேர்த்துக்கொள்
ளாதிருக்கிறவன் சிதற அடிக்கிறான்.
24 அசுத்த ஆவி ஒரு மனிதனை விட்டுப் புறப்படுகி
றபொழுது அது தண்ணீரில்லாத இடங்களில் இ
ளைப்பாறும் இடத்தைத் தேடித் திரிந்து அடையா
மலிருக்குங் காலத்தில் அது தான் விட்டு வந்த வீட்
டிற்குத் திரும்பவேண்டுமென்று சொல்லி,
25 அந்தப்படி வருகிறபொழுது அது பெருக்கிச்
சிங்காரிக்கப்பட்டிருக்கக்கண்டு,
26 பின்பு போய்த் தன்னிலும் அதிக பொல்லாத
வேறு ஏழு ஆவிகளைக் கூட்டிக்கொண்டுவந்து உட்
பிரவேசித்து அங்கே குடியிருக்கும். அப்பொழு
து அம்மனிதனுடைய முன்னிலைமையிலும் பின்னி

லைமை அதிக கேடுள்ளதாயிருக்குமென்றார்.

இவைகளை அவர் சொல்லுகையிற் கூட்டத்திலி 27
ருந்த ஒரு ஸ்திரியானவள் அவரை நோக்கி உம்மை
ச் சுமந்த வயிறும் நீர் பாலுண்ட முலைகளும் பாக்
கியமுள்ளவைகளென்று சத்தமாய்க் கூப்பிட்டாள்.

அவர் சொன்னது, அதனிலும் அதிகமாய்ப் ப 28
ராபரனுடைய வாக்கைக்கேட்டு அதைக் காத்துக்
கொள்ளுகிறவர்களே பாக்கியவான்களென்றார்.

அன்றியுஞ் சனங்கள் திரளாய்க் கூடி வந்திருக்கி 29
றபொழுது அவர் சொன்னதாவது, இந்தச் சந்ததி
யார்கள் பொல்லாதவர்களாய் இருக்கிறார்கள். ஓர்
அடையாளத்தைத் தேடுகிறார்கள். ஆனாலும் யோ
னாதீர்க்கதரிசியின் அடையாளமே அன்றி வேறு அ
டையாளம் இவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை.

ஆதலால் யோனாவானவன் நினிவேபட்டினத்தா 30
ருக்கு அடையாளமாயிருந்ததுபோலமனிதனுடை
ய குமாரனும் இந்தச் சந்ததிக்கு இருப்பார்.

தெற்கு இராசஸ்திரி சாலோமோனுடைய ஞா 31
னத்தைக் கேட்கும்படிக்குப் பூமியின் எல்லைகளிலி
ருந்து வந்தாள். சாலோமோனிலும் இந்தச் சந்த
தியிலே தோன்றினவன் அதிகமாயிருக்கிறான். ஆ
னாலும் இவர்கள் கேட்கமாட்டார்கள் ஆதலால் அ
ந்த இராசஸ்திரி நியாயத்தீர்ப்புநாளிலே இவர்களு
டனே கூட எழும்பி இவர்களை ஆக்கினைக்குள்ளாக
த் தீர்ப்பாள்.

நினிவேபட்டினத்தார் யோனாவின் பிரசங்கத் 32
தைக் கேட்டு மனந்திரும்பினார்கள். யோனாவிலும்
இந்தச் சந்ததியிலே தோன்றினவன் அதிகமாயிருக்
கிறான். (ஆனாலும் இவர்கள் மனந்திரும்பவில்லை,)
ஆகையால் நினிவேபட்டினத்தார் நியாயத்தீர்ப்பு
நாளிலே இவர்களுடனே கூட எழும்பி இவர்களை

ஆக்கினைக்குள்ளாகத் தீர்ப்பார்கள்.

33 அன்றியும் ஒருவனும் விளக்கைக் கொளுத்தி அதை அந்தரங்கத்திலாவது மரக்காலின் கீழாவது வைக்கமாட்டான். உள்ளே வருகிறவர்கள் வெளிச்சங்காணும்படிக்கு அதை ஒரு தண்டின்மேலே வைப்பான்.

34 கண்ணானது சரீரத்தின் விளக்காயிருக்கின்றது. அப்படியிருக்க உன் கண் தெளிவுள்ளதாயிருந்தால் உன் சரீரம் முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்கும். அது கெட்டதானால் உன் சரீரம் இருள் அடைந்திருக்கும்.

35 ஆகையால் உன்னிலுள்ள வெளிச்சமானது இருளாயிராதபடிக்கு எச்சரிக்கையாயிரு.

36 அப்படி உன் சரீரம் ஒருபுறத்திலும் இருள் அடைந்திராமல் முழுவதும் வெளிச்சமாயிருந்தால் அப்பொழுது ஒரு விளக்குத் தன் பிரகாசத்தினாலே உன்னை வெளிச்சமாக்குகிறதுபோல அது முழுவதும் வெளிச்சம் அடைந்திருக்குமென்றார்.

37 அவர் அப்படிப் பேசிக்கொள்ளுகையில் ஒரு பரிசேயன் தன்னுடனே கூடப் பகற் போசனம்பண்ணும்படிக்கு அவரை வேண்டிக்கொண்டான். அவர் போய்ப் பந்தியிருந்தார்.

38 போசனம்பண்ணுகிறதற்கு முன்னே அவர் ஸ்நானம்பண்ணாமலிருந்ததைப் பரிசேயன் கண்டு ஆச்சரியப்பட்டான்.

39 அப்பொழுது கர்த்தர் அவனை நோக்கி பரிசேயராகிய நீங்கள் போசனபான பாத்திரங்களில் வெளிப் புறத்தைச் சுத்தம்பண்ணுகிறீர்கள். உங்கள் உள்ளங்கொள்ளையினாலும் அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கின்றது.

40 ஆ! புத்தியீனரே, வெளிப்புறத்தை உண்டாக்கி

னவர் உட்புறத்தையும் உண்டாக்கவில்லையா?
அப்படியிருக்க, உங்களுக்கு உண்டானவைகளை 41
ப் பிச்சையாகக் கொடுங்கள். அப்பொழுது சகல
மும் உங்களுக்குச் சுத்தமாயிருக்கும்.
ஐயோ! பரிசேயராகிய உங்களுக்கு வேதனை வ 42
ரும் என்னத்தினாலெனில் நீங்கள் துளசியிலும் அ
ரூபி பூண்டிலுஞ் சகலவிதக் கீரைகளிலும் பத்தி
லொன்றுகொடுத்து நியாயத்தையுந் தேவ அன்பை
யும் விட்டு விலகுகிறீர்கள். இவைகளை நீங்கள் நடப்
பித்து அவைகளையும் விட்டுவிடாதிருக்க வேண்டும்.
ஐயோ! பரிசேயரே, உங்களுக்கு வேதனைவரு 43
ம். என்னத்தினாலெனில் ஜெப ஆலயங்களில் முத
ல் ஆசனத்தையுஞ் சந்தைகளில் வாழ்த்துதல்களை
யும் விரும்புகிறீர்கள்.
ஐயோ! வஞ்சகராகிய வேதபாரகரே, பரிசேய 44
ரே, உங்களுக்கு வேதனைவரும். என்னத்தினாலெ
னிற் காணப்படாத பிரேதக் குழிகளைப்போலிருக்
கிறீர்கள். மனிதர் அவைகளை அறியாமல் அவைகள்
மேலே நடக்கிறார்களென்று சொல்லுகிறபொழுது,
நியாய சாஸ்திரிகளிலொருவன் அவரை நோக்கி 45
ப் போதகரே, நீர் இப்படிச் சொல்லுகிறதினாலே
எங்களையும் நிந்திக்கிறீரே என்றான்.
அதற்கு அவர் சொன்னது, ஐயோ! நியாய சா 46
ஸ்திரிகளாகிய உங்களுக்கும் வேதனைவரும். என்
னத்தினாலெனில், மிகவும் பாரமான சுமைகளை ம
னிதர்கள் மேல் ஏற்றுகிறீர்கள். நீங்கள் தாமே உ
ங்கள் விரல்களிலொன்றினாலும் அந்தச் சுமைகளை
த் தொடமாட்டீர்கள்.
ஐயோ! உங்களுக்கு வேதனைவரும். என்னத்தி 47
னாலெனில் உங்கள் பிதாக்களாற் கொலைசெய்யப்ப
ட்ட தீர்க்கதரிசிகளுடைய பிரேதக்குழிகளின் மே

லே திண்ணையைக் கட்டுகிறீர்கள்.
48 உங்கள் பிதாக்கள் அவர்களைக் கொலைசெய்த பி
ன்பு நீங்கள் அவர்களுடைய கல்லறைகளின் மேல்
வீடுகட்டுகிறபடியால் நீங்கள் உங்கள் பிதாக்களுடை
ய கிரியைகளுக்குச் சம்மதிக்கிறவர்களென்று சாட்
சிகொடுக்கிறீர்கள்.
49 ஆகையால் பராபரனுடைய ஞானஞ் சொல்லுகி
றதாவது, நான் தீர்க்கதரிசிகளையும் அப்போஸ்தல
ரையும் அவர்களிடத்தில் அனுப்புவேன். அவர்க
ளிற் சிலரைக் கொலைசெய்து சிலரைத் துன்பப்ப
டுத்துவார்கள்.
50 உலகத் தோற்றம் முதற்கொண்டு ஆபேலின் இ
ரத்தந் தொடங்கிப் பலிபீடத்துக்குந் தேவாலயத்
துக்கும் நடுவே அழிக்கப்பட்ட சகரியாவின் இரத்
தம் வரைக்குஞ் சிந்தப்பட்ட சகல தீர்க்கதரிசிகளு
டைய இரத்தமும் இந்தச் சந்ததியினிடத்திலே கே
ட்கப்படும்படிக்கு அப்படிச் செய்வார்கள்.
51 இந்தச் சந்ததியினிடத்திலே அது கேட்கப்படு
மென்று நிச்சயமாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.
52 ஐயோ! நியாயசாஸ்திரிகளாகிய உங்களுக்கு வே
தனை வரும். என்னத்தினாலெனில் அறிவின் திறவு
கோலை எடுத்துக்கொண்டு போனீர்கள். நீங்களே
உட்பிரவேசிக்கவில்லை. உட்பிரவேசிக்கிறவர்களு
க்குத் தடைபண்ணினீர்களென்றார்.
53 இவைகளை அவர் அவர்களுடனே பேசிக்கொண்
டபொழுது வேதபாரகரும் பரிசேயரும் அவரிட
த்திற் குற்றங் காணும்படிக்கு,
54 அநேக காரியங்களைக் குறித்து அவர் பேசும்படி
மிகவும் அவரை நெருக்கமாய் விளுவித் தந்திரமாய்
க் காத்திருந்து அவருடைய வாய்மொழியிலே தப்
பிதங் காணப் பார்த்தார்கள்.

௰உ. அதிகாரம்.

அத்தருணத்திலே அநேக ஆயிரஞ் சனங்கள் ஒரு 1
வரையொருவர் மிதித்துக் கொள்ளத்தக்கதாகக் கூ
டி வந்திருக்கிறபொழுது அவர் தமது சீஷருடனே
சொன்னதாவது, பிரதானமாய் நீங்கள் வஞ்சகமா
கிய பரிசேயருடைய புளிப்புள்ள மாவுக்கு இடங்
கொடாமல் எச்சரிக்கையாயிருங்கள்.

வெளியாகாத மறைபொருளும் அறியப்படாத 2
அந்தரங்கமும் ஒன்றுமில்லை.

அப்படியிருக்க நீங்கள் இருளிற் பேசினது எது 3
வோ அது வெளிச்சத்திலே கேட்கப்படும். நீங்க
ள் அறைகளிற் காதுக்குட் சொன்னது எதுவோ
அது வீடுகள் மேலே பிரசங்கிக்கப்படும்.

அல்லாமலும் என் சிநேகிதரான உங்களுக்கு நா 4
ன் சொல்லுகிறதாவது, சரீரத்தைக் கொலைசெய்தா
லும் அதின் பின்பு அதிகம் ஒன்றும் உங்களுக்குச்
செய்யத் திராணியில்லாதவர்களுக்குப் பயப்படா
திருங்கள்.

நீங்கள் பயப்படத்தக்கவர் இன்னாரென்று உங்க 5
ளுக்குக் காண்பிக்கிறேன். கொலைசெய்த பின்பு ந
ரகத்திலே தள்ளுகிறதற்கு அதிகாரமுடையவரா
கிய (பராபரனுக்கு) பயப்படுங்கள். அவருக்கே
பயப்படக் கடவீர்களென்று உங்களுக்குச் சொல்
லுகிறேன்.

இரண்டு காசுக்கு ஐந்து அடைக்கலான் குருவிக 6
ளை விற்கிறார்களல்லவோ. ஆனாலும் அவைகளில் ஒ
ன்றும் பராபரனாலே மறக்கப்படுகிறதில்லை.

உங்கள் தலையிலுள்ள எல்லாமயிர்களும் எண்ண 7
ப்பட்டிருக்கின்றது. ஆகையாற் பயப்படாதிருங்க

ள். அநேகம் அடைக்கலான் குருவிகளிலும் நீங்க
ள் மேன்மையாயிருக்கிறீர்கள்.
8 அன்றியும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவ
து, எவனாகிலும் மனிதர் முன்பாக என்னை அறிக்
கைபண்ணினால் மனிதனுடைய குமாரனும் பராப
ரனுடைய தூதர்கள் முன்பாக அவனை அறிக்கைப
ண்ணுவான்.
9 மனிதர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் பரா
பரனுடைய தூதர்கள் முன்பாக மறுதலிக்கப்படு
வான்.
10 எவனாகிலும் மனிதனுடைய குமாரனுக்கு விரோ
தமாய்ப் பேசினால் அது அவனுக்கு மன்னிக்கப்ப
டும். பரிசுத்த ஆவியைத் தூஷணிக்கிறவனுக்கு அ
து மன்னிக்கப்படாது.
11 அன்றியுஞ் செப ஆலயங்களுக்கும் துரைத்தனங்
களுக்கும் அதிகாரங்களுக்கும் முன்பாக உங்களைக்
கொண்டுபோய் விடும்பொழுது எப்படி என்னத்
தை எதிருத்தரவாகச் சொல்லுவோமென்றும் எதை
ப் பேசுவோமென்றுங் கவலைப்படாதிருங்கள்.
12 நீங்கள் பேசவேண்டியவைகளைப் பரிசுத்த ஆவி
யானவர் அந்நேரத்திலே உங்களுக்குப் போதிப்பா
ரே என்றார்.
13 அப்பொழுது கூட்டத்திலொருவன் அவரை நோ
க்கிப் போதகரே, என் சகோதரன் எனக்கும் தன
க்குமுண்டான சுதந்தர ஆஸ்தியைப் பங்கிட்டுக்
கொள்ளும்படிக்குக் கட்டளையிடும் என்றான்.
14 அதற்கு அவர் சொன்னது, மனிதனே என்னை
உங்களுக்கு நியாயாதிபதியாகவும் பங்கிடுகிறவனாக
வும் எற்படுத்தினவன் யாவனென்றுசொல்லி,
15 பின்பு எல்லாரையும் நோக்கி ஒருவனுக்கு எவ்வ
ளவு ஆஸ்தியுண்டாயிருந்தாலும் அவைகளினாலே அ

வனுடைய ஜீவனுண்டாயிராது. ஆகையால் நீங்கள் பொருளாசைக்கு இடங்கொடாமல் எச்சரிக்கையாயிருக்கக் கடவீர்களென்றார்.

அல்லாமலும் ஒரு உவமையை அவர்களுக்குச் 16
சொன்னார். அதாவது, ஐசுவரியமுள்ள ஒருமனிதனுடைய காணி பூமி நன்றாய் விளைந்தது.

அப்பொழுது அவன் தனக்குள்ளே சிந்தித்துக் 17
கொண்டு சொன்னது, என் தானியத்தைச் சேர்த்து வைக்கிறதற்கு வேண்டிய இடமில்லையே.

நான் என்னசெய்யலாம்! என் களஞ்சியங்களை 18
நான் இடித்து அதிக பெரிதானவைகளைக் கட்டி எனக்கு உண்டான தானியம் யாவையும் என்பொருளையும் அங்கே சேர்த்து வைக்கவேண்டும்.

பின்பு நான் என் ஆத்துமாவே, அநேகவருஷங்க 19
ளுக்குஉனக்காகயிருந்தபொருள்கள்வைக்கப்பட்டிக்கின்றன. ஆகையால் இளைப்பாறிப் புசித்துக் குடித்து மகிழ்ச்சியாயிருவென்று என் ஆத்துமாவுடனே சொல்லவேண்டுமென்றான்.

அப்பொழுது பராபரன் அவனுடனே சொன் 20
னது, புத்தியீனனே, இந்த இராத்திரியிலே உன் ஆத்துமாவை உன்னிடத்திற் கேட்டு எடுத்துக்கொள்வார்கள். அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருக்காக இருக்குமென்றார்.

பராபரனில் ஐசுவரியவானாயிராமல் தனக்காகப் 21
பொக்கிஷங்களைச் சேர்க்கிறவனுக்கு அப்படியே சம்பவிக்குமென்று சொல்லி,

பின்பு தம்முடைய சீஷரை நோக்கி அதினாலே 22
நீங்கள் உங்கள் ஜீவனைக்குறித்து என்ன உண்போமென்றும் உங்கள் சரீரத்தைக் குறித்து என்ன உடுப்போமென்றுங் கவலைப்படாதிருங்களென்று உங்களுக்குச் சொல்லுகிறேன்.

23 ஆகாரத்திற்குச் சீவனும் உடைக்குச் சரீரமும் அ
திகமாயிருக்கின்றதே.
24 காகங்களை நோக்கிப் பாருங்கள். அவைகள் வி
தைக்கிறதும் இல்லை அறுக்கிறதும் இல்லை. அவை
களுக்குப் பண்டசாலையுங் களஞ்சியமுமில்லை. அ
வைகளுக்கும் பராபரன் உணவுகொடுக்கிறார். பற
வைகளிலும் நீங்கள் மிகவும் அதிக மேன்மையாயிரு
க்கிறீர்களல்லவா?
25 அன்றியும் உங்களிலொருவன் கவலைப்படுகிறதினா
லே தன் வடசோட்டே ஒரு நாழிகையையாகிலுங் கூ
ட்டுவானா?
26 மிகவுஞ் சிறிதானது உங்களாலாகாதிருக்க மற்ற
வைகளுக்காக நீங்கள் என்னத்திற்குக் கவலைப்படுகி
றீர்கள்.
27 லீலியென்னும் புஷ்பங்கள் வளருகிற வகையை
ச் சிந்தித்துக்கொள்ளுங்கள். அவைகள் வருந்துகி
றதுமில்லை. நூற்கிறதுமில்லை. (அவை மிகவும் அ
ழகாயிருக்கின்றன) சாலோமோன்தானே மிகுந்த
மகிமையுடையவனாயிருந்தும் அவைகளில் ஒன்றை
ப்போல (அழகாய்) உடுத்தியிருக்கவில்லையென்று
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
28 அப்படியிருக்க, அற்பவிசுவாசிகளே, இன்றைக்
கு வெளியிலிருந்து நாளைக்கு அடுப்பிற் போடப்
படுகிற புல்லுக்குப் பராபரன் இவ்விதமாக உடுத்
தினால் மிகவும் அதிகமாய் உங்களுக்கு அப்படிச்செ
ய்வாரல்லவா?
29 ஆகையால் என்னத்தை உண்போம் என்னத்
தைப் பானம்பண்ணுவோமென்று நீங்கள் கேளா
மலுங் கலக்கம் அடையாமலுமிருங்கள்.
30 உலகத்தார் இப்படிப்பட்டவைகள் யாவையுந்
தேடுகிறார்கள். இவைகள் உங்களுக்கு வேண்டுமெ

ன்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார்.
விசேஷமாய்ப் பராபரனுடைய இராச்சியத்தை 31
த் தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உ
ங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்.
சின்ன ஆட்டுக்கூட்டமே, உங்கள் பிதா இராச்சி 32
யத்தை உங்களுக்குக் கொடுக்கப் பிரியமாயிருக்கிறா
ர் ஆகையாற் பயப்படாதிருங்கள்.
உங்களுக்கு உண்டானவைகளை விற்றுப் பிச்சை 33
கொடுங்கள். உங்கள் பொக்கிஷம் எங்கேயோ அ
ங்கே உங்கள் இருதயமுமிருக்கும்.
ஆகையாற் பழமையாய்ப் போகாத பணப்பை 34
களையுங் குறைந்து போகாத பொக்கிஷத்தையும்
பரமண்டலங்களில் உங்களுக்காக உண்டுபண்ணுங்
கள். அங்கே திருடன் சேருகிறதுமில்லை பூச்சிகெ
டுக்கிறதுமில்லை.
உங்கள் அரைகள் கட்டப்பட்டவைகளாகவும் உங் 35
கள் விளக்குகள் எரிகிறவைகளாகவுந் தங்கள் எசமா
ன் கலியாணத்திலிருந்து திரும்பி வந்து தட்டும்
பொழுது உடனே அவருக்குத் திறக்கும்படிக்கு
அவன் வரக் காத்திருக்கிற மனிதருக்கு ஒப்பாகவு
மிருங்கள்.
எசமான் வந்து விழித்திருக்கக் காணும் ஊழிய 36
க்காரரே பாக்கியர்.
அவன் அரையிற் கச்சைக் கட்டிக்கொண்டு அவ 37
ர்களைப் பந்தியிருக்கச் செய்து பின்பு வந்து அவர்
களுக்கு ஊழியஞ் செய்வானென்று மெய்யாகவே
உங்களுக்குச் சொல்லுகிறேன்.
அவன் இரண்டாஞ் சாமத்திலாவது மூன்றாஞ் சா 38
மத்திலாவது வந்து அப்படியே கண்டால் அவ்வூழி
யக்காரர் பாக்கியவான்களாயிருப்பார்கள்.
திருடன் இன்னவின்ன நேரத்தில் வருவானென் 39

று வீட்டெசமான் அறிந்தால் அவன் விழித்திருந்து தன் வீட்டைக் கன்னமிடும்படிக்கு இடங்கொடுக்க மாட்டான். அது உங்களுக்குத் தெரியும்.

40 அந்தப்படியே நீங்களும் நினையாத நேரத்திலே மனிதனுடைய குமாரன் வருவதால் எத்தனமாயிருக்கக் கடவீர்களென்றார்.

41 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி ஆண்டவரே, இந்த உவமையை நீர் எங்களுக்கு (மாத்திரம்) சொல்லுகிறீரோ எல்லாருக்குஞ் சொல்லுகிறீரோ என்றான்.

42 அதற்குக் கர்த்தர் சொன்னது, தகுதியான காலத்திலே படிகொடுக்கும்படிக்கு எசமான் தன்னுடைய பணிவிடைச் சனங்கள்மேல் வைக்கத்தக்க உண்மையும் புத்தியுமுள்ள விசாரணைக்காரன் யாவன்?

43 எசமான் வரும்பொழுது அப்படிச் செய்யக்காணப்படுகிற ஊழியக்காரன் பாக்கியவான்.

44 எசமான் தனக்குண்டான எல்லாவற்றின்மேலும் அவனை வைப்பானென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

45 அந்த ஊழியக்காரன் என் எசமான் வரத் தாமதிக்கிறாரென்று தன் இருதயத்திலெண்ணி வேலைக்காரரையும் வேலைக்காரிகளையும் அடிக்கவும் புசித்துக் குடித்து வெறிகொள்ளவுந் தொடங்கினால்,

46 அந்த ஊழியக்காரன் நினையாதநாளிலும் அறியாத நேரத்திலும் அவனுடைய எசமான் வந்து அவனைத் தண்டித்துப் போட்டு உண்மையில்லாதவர்களுடனே அவனுக்குப் பங்கை ஏற்படுத்துவான்.

47 மிகுதியைப் பெற்றவனெவனோ அவனிடத்தில் மிகவும் விசாரிக்கப்படும். மிகுதியைப் பற்றிக்கொண்டவனிடத்தில் அதிகங் கேட்கப்படும்.

48 ஆதலால் தன் எசமானுடைய சித்தத்தை அறிந்

னும் எத்தனமாயிராமலும் அவனுடைய சித்தத்தி
ன்படி செய்யாமலுமிருக்கிற ஊழியகாரன் அநே
க அடிகளைப் பெற்றுக்கொள்வான் (சித்தத்தை) அ
றியாதவனாயிருந்து அடிகளுக்கு ஏற்றவைகளைச்
செய்கிறவன் கொஞ்ச அடிகளைப் பெற்றுக்கொள்
வான்.

அக்கினியைப் பூமியின்மேற் போடவந்தேன் 49
அது இப்பொழுது பற்றி எரியும்படிக்கு விரும்பு
கிறேன்.

அதற்கு முன்னே நான் அடையவேண்டிய ஒரு 50
ஸ்நானமுண்டு. அது முடியுமளவும் நான் மிகவும்
நெருக்கப்படுகிறேன்.

நான் பூமிக்குச் சமாதானத்தைத் தரும்படிக்கு 51
வந்தேனென்று நினைக்கிறீர்கள்? அதையல்ல, பிரிவி
னையைத் தரும்படிக்கு வந்தேனென்று உங்களுக்
குச் சொல்லுகிறேன்.

எப்படியெனில் இது முதல் ஒரே குடும்பத்தி 52
லே ஐந்துபேர் பிரிந்திருப்பார்கள். மூன்றுபேர்
இரண்டுபேருக்கும் இரண்டுபேர் மூன்றுபேருக்
கும் விரோதமாயிருப்பார்கள்.

தகப்பன் மகனுக்கும் மகன் தகப்பனுக்குந் தா 53
ய் மகளுக்கும் மகள் தாய்க்கும் மாமி தன் மருமக
ளுக்கும் மருமகள் தன் மாமிக்கும் விரோதமாகப்
பிரிந்துபோவார்கள் என்றார்.

பின்பு அவர் சனங்களுடனே சொன்னது, நீங்க 54
ள் ஒரு மேகம் மேற்கிலே எழும்புகிறதைக் காண்கி
றவுடனே பெருமழை வருமென்று சொல்லுகிறீர்
கள். அந்தப்படியேயும் ஆகும்.

அல்லாமலுந் தென்றல் அடிக்கிறதை நீங்கள் கா 55
ண்கிறபொழுது காங்கையுண்டாகுமென்கிறீர்கள்.
அந்தப்படியேயும் ஆகும். ஆ! வஞ்சகரே, பூமியி

ன் உருவத்தையும் வானத்தின் உருவத்தையும் வகை யறுக்க அறிந்திருக்கிறீர்கள். இக்காலத்தைமாத்திர ம் நீங்கள் வகையறாமலிருக்கிற தெப்படி?
56 அல்லாமலும் நியாயமின்னதென்று நீங்கள் உங் களாலே எண்ணிக்கொள்ளாமலிருக்கிறதென்ன?
57 நீ உன் எதிராளியுடனே கூடத் துரையினிடத் துக்குப் போகிற பொழுது அவனைவிட்டு நீங்கும் படிக்கு வழியிலே பிரயாசப்படுவாயாக. இல்லா விட்டால் அவன் உன்னை நியாயாதிபதிக்கு முன்பா கக் கொண்டுபோவதுமல்லாமல் நியாயாதிபதி உ ன்னைச் சேவகனுக்கு ஒப்புக்கொடுப்பான். சேவ கன் உன்னைக் காவலிற் போடுவான்.
58 நீ ஒரு காசாகிலுங் குறையாமற் செலுத்துகிறவ ரைக்கும் அவ்விடத்திலிருந்து விடுதலையாக்கப்பட மாட்டாயென்று உனக்குச் சொல்லுகிறேனென் றார்.

௰௩. அதிகாரம்.

1 பிலாத்தென்பவன் சில கலிலேயருடைய இரத்த த்தை அவர்களுடைய பலிகளுடனே கலந்திருந்தா ன். அந்தக் கலிலேயரைக் குறித்து அவ்வேளையி லே அங்கேயிருக்கிற சிலர் அவருடனே பேசிக்கொ ண்டார்கள்.
2 அவர்களுக்குப் பிரத்தியுத்தரமாக இயேசுவா னவர் சொன்னதாவது, அந்தக் கலிலேயர் அப்படி ப்பட்டவைகளை அனுபவித்ததினாலே மற்றெல்லா க் கலிலேயரிலும் (அதிக) பாவிகளாயிருந்தார்கள் என்று நினைக்கிறீர்கள்?
3 அப்படியில்லை என்று உங்களுக்குச் சொல்லுகி றேன். நீங்கள் மனந்திரும்பாவிட்டால் எல்லாரு

ம் அப்படிக் கெட்டுப் போவீர்கள்.
அல்லாமலுஞ் சீலோவாமிலே கோபுரம் விழுந் 4
து பதினெட்டுப்பேரைக் கொன்றதே. எருசலே
மிற் குடியிருக்கிற மனிதர் எல்லாரிலும் அந்தப் ப
தினெட்டுப்பேரும் அதிக குற்றவாளிகளாயிருந்தா
ர்களென்று நினைக்கிறீர்கள்?
அப்படியில்லை என்று உங்களுக்குச் சொல்லுகி 5
றேன். நீங்கள் மனந் திரும்பாவிட்டால் எல்லாரு
ம் அப்படிப்போலக் கெடுவீர்கள் என்றார்
அல்லாமலும் அவர் சொன்ன உவமையாவது, 6
ஒருவன் திராட்சத் தோட்டத்தில் ஒரு அத்திமரத
தை நாட்டியிருந்தான்.
பின்பு அவன் வந்து அதிலே கனியைத் தேடின 7
பொழுது ஒன்றுங் காணவில்லை. உடனே அவன்
தோட்டக்காரனை நோக்கி, இதோ மூன்றுவருஷ
மாய் இந்த அத்திமரத்திலே கனியைத தேடி வருகி
றேன் ஒன்றுங் காணவில்லை இதை வெட்டிப்போ
டு நிலத்தையும் இது எதனத்திற்குக் கெடுக்கிறதெ
ன்றான்?
அதற்கு அவன் சொன்னது, ஐயா, நான் இதைச் 8
சுற்றிக் கொத்தி எருப்போடுவேன். ஒருவேளை இ
து கனிகொடுக்கும். ஆகையால் இது இந்தவருஷ
ம் வரைக்கும் இருக்கட்டும்.
கனிகொடாதிருந்தால் நீர் இனிமேல் இதை வெட் 9
டிப்போடலாமென்று சொன்னானென்றார்.
ஒரு ஓய்வுநாளில் அவர் ஒரு ஜெப ஆலயத்திற் 10
போதகம்பண்ணிக்கொண் டிருந்தபொழுது,
பதினெட்டு வருஷமாய்ப் பலவீனமாகச செய் 11
கிற ஆவியையுடைய ஒரு ஸ்திரி அங்கேயிருந்தாள்
அவள் எவ்வளவும் நிமிரக் கூடாத கூனியாயிருந்
தாள்.

12 இயேசுவானவர் அவளைக் கண்டு தம்மிடத்தில்
அழைத்து ஸ்திரியே, உன் பலவீனத்திலிருந்து விடு
தலையாக்கப்பட்டாயென்று சொல்லி அவள்மேலே
தமது கைகளை வைத்தார்.

13 உடனே அவள் நிமிர்ந்து பராபரனைத் துதிசெய்
தாள்.

14 இயேசுவானவர் ஓய்வுநாளிலே குணமாக்கினதை
ச் செப ஆலயத் தலைவன் கண்டு விசனம் அடைந்து
சனங்களை நோக்கி வேலைசெய்யும்படிக்கான ஆறு
நாளுண்டு. அவைகளிலே நீங்கள்வந்து குணமாக்கி
க் கொள்ளுங்கள். ஓய்வுநாளிலே அப்படிச்செய்யக்
கூடாதென்றான்.

15 அவனுக்கு மாறுத்தரமாகக் கர்த்தர் சொன்னது,
வஞ்சகனே, உங்களில் எவனானாலுந் தன் எருதை
அல்லது தன் கழுதையை ஓய்வுநாளிலே தொழுவி
லிருந்து அவிழ்த்துக்கொண்டுபோய் அதற்குத் த
ண்ணீர் காட்டுகிறதில்லையா?

16 (அதுபோல) ஆபிரகாமின் சந்ததியும் பதினெட்
டு வருஷஞ் சாத்தானாலே கட்டப்பட்டிருக்கிற இ
வளை ஓய்வுநாளிலே அந்தச் சங்கிலியிலிருந்து அவிழ்
த்துவிட வேண்டியதில்லையா என்றார்?

17 அப்படி அவர் சொன்னபொழுது அவரை வி
ரோதித்திருந்த அனைவரும் வெட்கப்பட்டார்கள்.
அல்லாமலுஞ் சனங்கள் யாவரும் அவர்செய்த மகி
மையான செய்கைகளைக் குறித்துச் சந்தோஷிப்ப
ட்டார்கள்.

18 பின்பு அவர் சொன்னது, பராபரனுடைய இரா
ச்சியம் எதற்கு ஒப்பாயிருக்கின்றது. அதை எதற்
கு நிகர்சொல்லுவேன்.

19 அது ஒரு கடுகு விதைக்கு ஒப்பாயிருக்கின்றது
(எப்படியெனில்) ஒரு கடுகை ஒரு மனிதன் எடுத்

றுத் தன் தோட்டத்திற்போட்டான். அது வளர்ந்
து பெரிய செடியாயிற்று. அப்பொழுது ஆகாச
த்துப்பறவைகள் அதின் கிளைகளிற் கூடுகட்டினவெ
ன்றான்.

அன்றியும் அவர் சொன்னது, பராபரனுடைய 20
இராச்சியத்தை எதற்கு நிகர்சொல்வேன்.

அது புளிப்புள்ளமாவுக்கு ஒப்பாயிருக்கின்றது. 21
எப்படியெனில் அதை ஒரு ஸ்திரியெடுத்து மூன்று
மரக்கால் மா முழுவதும் புளிப்படையத்தக்கதாக
அதிலே அடக்கிவைத்தாளென்றார்.

அன்றியும் அவர் எருசலேமுக்குப் பிரயாணமா 22
ய்ப் போகிறபொழுது பட்டினங்கள்தோறும் கிரா
மங்கள்தோறும் போய் உபதேசம்பண்ணினார்.

அப்பொழுது ஒருவன் அவரை நோக்கி, ஆண்ட 23
வரே, சிலபேர் மாத்திரந்தான் இரட்சிக்கப்படுவா
ர்களோ என்றான்.

அதற்கு அவர் சொன்னது, இடுக்கமான வாசலி 24
ன் வழியாய் (சீவனிற்) பிரவேசிக்க மிகவும் பிரயா
சப்படுங்கள். என்னத்தினாலெனில் அநேகர் உட்பி
ரவேசிக்கத் தேடினாலும் பிரவேசிக்கமாட்டார்க
ளென்று உங்களுக்குச்சொல்லுகிறேன்.

வீட்டெசமானெழுந்திருந்து கதவைப் பூட்டின 25
பின்பு நீங்கள் வெளியே நின்று கதவிலே தட்டி ஆ
ண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்
டுமென்றுகூப்பிடத் தொடங்குங்காலத்திலே அவர்
நான் உங்களை அறியேனென்றும் நீங்கள் விட்டுவந்த
இடத்தை அறியமாட்டேனென்றும் உங்களுடனே
சொல்லும் பொழுது,

நீங்கள் உமக்கு முன்பாகப் போசனபானம் ப 26
ண்ணினோமே. நீர் எங்கள் வீதிகளிலே போதகம்
பண்ணினீரே என்று சொல்லுவீர்கள்.

27 ஆனாலும் அவர் சொல்வது, உங்களை அறியேன்.
நீங்கள் விட்டுவந்த இடத்தை அறியேன். அக்கிரம
க்காரராகிய நீங்கள் எல்லாரும் என்னைவிட்டுப்போ
ங்களென்று சொல்வாரென்று உங்களுக்குச் சொல்
லுகிறேன்.
28 நீங்கள் ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்
களையுஞ் சகல தீர்க்கதரிசிகளையும் பராபரனுடைய
இராச்சியத்திலுள்ளவர்களென்றும் உங்களைப் புற
ம்பே தள்ளப்பட்டவர்களென்றுங் காணும்பொழு
து உங்களுக்கு அழுகையும் பற்கடிப்பும் உண்டா
யிருக்கும்.
29 அன்றியுங் கிழக்கிலும் மேற்கிலும் வடக்கிலுந்
தெற்கிலும் இருந்து சனங்கள் வந்து பராபரனு
டைய இராச்சியத்திற் பந்தியிருப்பார்கள்.
30 அப்பொழுது பிந்தினோர் முந்தினோராயிருப்பா
ர்கள். முந்தினோர் பிந்தினோராவார்களென்றார்.
31 அந்த நாளிலே சில பரிசேயர் அவரிடத்திற் போ
ய் ஏரோதே உம்மைக் கொலைசெய்ய மனதாயிருக்
கிறான். ஆகையால் நீர் இவ்விடத்தைவிட்டுப் போ
கவேண்டும் என்றார்கள்.
32 அவர்களுடனே அவர் சொன்னது, நீங்கள் போ
ய் இன்றைக்கும் நாளைக்கும் நான் பசாசுகளைத் து
ரத்தி ஆரோக்கியங்களைச் செய்து முடித்து மூன்
றாம்நாளில் நிறைவு அடைவேன்.
33 முக்கியமாக எருசலேமுக்குப் புறம்பே ஒரு தீர்
க்கதரிசி மடிந்துபோகிறது வழக்கமல்லாதபடியால
நான் இன்றைக்கும் நாளைக்கும் பின்வருகிற நாளி
லேயும் இவ்விடங்களில் நடக்கவேண்டியதாய் இரு
க்கிறதென்று அந்த நரிக்குச்சொல்லுங்கள்.
34 எருசலேம்பட்டினத்தாரே, எருசலேம்பட்டின
த்தாரே, உங்களிடத்தில் அனுப்பப்பட்டவர்கள்

மேற் கல்லெறிந்து தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்கிறவர்களே ஒரு கோழி தன் குஞ்சுகளைத் தன் சிறகுகளின் கீழே சேர்த்துக்கொள்ளுகிறவிதமாய் நான் அநேகந்தரம் உங்களைச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்றிருந்தேன். நீங்கள் வரமாட்டோமென்றீர்கள்.

(ஆதலால்) உங்கள் வாசஸ்தலம் பாழாக்கி விடப் 35
படும். அல்லாமலும் நீங்கள் பராபரனுடைய நாமத்தினாலே வருகிறவர் தோத்திரஞ்செய்யப்படத்தக்கவரென்று சொல்லுங் காலபரியந்தம் என்னைக் காணாமலிருப்பீர்களென்றார்.

௰௪. அதிகாரம்.

ஒரு ஓய்வுநாளில் அவர் பரிசேயருக்குள்ளே த 1
லைவரானவர்களில் ஒருவனுடைய வீட்டிலே போசனம்பண்ணும்படிக்குப் போகிறபொழுது,

பாண்டு வியாதியுள்ள ஒரு மனிதன் அவருக்கு 2
முன்பாக நிற்கையில் அவர்கள் அவரை நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அப்பொழுது இயேசுவானவர் நியாயசாஸ்திரிக 3
ளையும் பரிசேயரையும் நோக்கி ஓய்வுநாளிலே குணமாக்குகிறது நியாயமா என்றார்கள்.

அதற்கு அவர்கள் பேசாமலிருந்தார்கள். அப் 4
பொழுது அவர் அவனைப் பிடித்துக் குணமாக்கி,

அனுப்பிப் பின்பு அவர்களுடனே சொன்னது, 5
உங்களில் எவனானாலுந் தன் கழுதையாவது எருதையாவது ஓய்வுநாளில் ஒருகிணற்றிலே விழுந்தால் உடனே அதைத் தூக்கிவிடானோவென்றார்.

அதற்கு மாறுத்தரஞ் சொல்ல அவர்கள் திராணி 6
யில்லாதிருந்தார்கள்.

7 விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பந்தியில்
முதலிடங்களைத் தெரிந்துகொண்டதை அவர் பார்
த்து அவர்களுக்கு உவமையாய்ச் சொன்னது,
8 நீ ஒருவனாற் கலியாணத்துக்கு அழைக்கப்பட்ட
பொழுது பந்தியில் முதலிடத்தில் உளுக்காராதிரு.
என்னத்தினாலென்றால் உன்னிலும் அதிக கனமுள்
ளவன் அவனால் அழைக்கப்பட்டிருக்க,
9 உன்னையும அவனையும் அழைத்தவன் உன்னிடத்
தில் வந்து இவருக்கு இடங்கொடும் என்று சொல்
ல நீ வெட்கத்தோடே தாழ்ந்த இடத்திற் போயி
ருக்க வேண்டியதாயிருக்கும்.
10 ஆகையால் நீ அழைக்கப்பட்டபொழுது நீ போ
யித் தாழ்ந்த இடத்தில் உளுக்காருவாயாக. அப்
பொழுது உன்னை அழைத்தவன் உன்னிடத்தில் வ
ந்து சிநேகிதனே, மேலான இடத்திற் போயிருமெ
ன்று சொல்லப் பந்தியிருக்கிறவர்களுக்கு முன்பா
க உனக்குக் கனமுண்டாகும்.
11 அப்படிக்கு எவன் தன்னை உயர்த்துகிறானோ அ
வன் தாழ்த்தப்படுவான். எவன் தன்னைத் தாழ்த்
துகிறானோ அவன் உயர்த்தப்படுவான் என்றார்.
12 அல்லாமலும் அவர் தம்மை விருந்துக்கு அழை
த்தவனுடனே சொன்னது, நீர் பகல் விருந்தை அ
ல்லது இராவிருந்தைப் பண்ணுகிறபொழுது உம
து சிநேகிதரையுஞ் சகோதரரையும் மற்ற இனத்
த்தாரையும் ஐசுவரியமுள்ள பிறரையும அழைக்கக்
கூடாது. அழைத்தால் அவர்களும் உம்மை அ
ழைப்பார்கள். அதினாலே உமக்குப் பதிற்பலனு
ண்டாகும்.
13 நீர் விருந்துபண்ணும்பொழுது ஏழைகள் ஊன
ர் சப்பாணிகள் குருடர் இப்படிப்பட்டவர்களை அ
ழைப்பீராக.

அப்பொழுது அவர்கள் உமக்குப் பதிற்கொடுக் 14
கத் திராணியில்லாதபடியால் நீர் பாக்கியராயிருப்
பீர் நீதிமான்கள் உயிரோடெழுந்திருக்குங் கால
த்திலே உமக்குப் பதில் அளிக்கப்படும் என்றார்.

அவரோடே கூடப் பந்தியிருந்தவர்களில் ஒருவ 15
ன் இந்த வசனங்களைக் கேட்டபொழுது அவன் அ
வரை நோக்கிப் பராபரனுடைய இராச்சியத்திற்
போசனம்பண்ணுகிறவன் பாக்கியவானென்றான்.

அதற்கு அவர் சொன்னது, ஒரு மனிதன் பெரி 16
ய விருந்து பண்ணி,

அநேகரை அழைத்து விருந்து வேளையிலே த 17
ன் ஊழியக்காரனை நோக்கி, நீ அழைக்கப்பட்டவ
ர்களிடத்திற்குப் போய்ச் சகலமும் ஆயத்தமாயிற்
று. ஆகையால் வாருங்களென்று சொல்லென்று
அனுப்பினான்.

அப்பொழுது அவர்கள் எல்லாரும் போக்குச் 18
சொல்லத் தொடங்கினார்கள். ஒருவன் சொன்னது
ஒரு வயல்நிலத்தைக் கொண்டேன். நான் போய்
அதைப் பார்க்க அவசியமாயிருக்கின்றது. ஆகை
யால் எனக்கு மன்னிக்கவேண்டுமென்று உன்னை
வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

வேறொருவன் சொன்னது, ஐந்தேர்மாடு கொ 19
ண்டேன். அவைகளை நான்போய்ச் சோதிக்கவே
ண்டும். ஆகையால் எனக்கு மன்னிக்கும்படிக்கு
உன்னை வேண்டிக்கொள்ளுகிறேன் என்றான்.

வேறொருவன் சொன்னது, பெண்ணை விவாகம் 20
பண்ணினேன். அதினாலே நான் வரக் கூடாதெ
ன்றான்.

பின்பு அந்த ஊழியக்காரன் வந்து அவைகளைத் 21
தன் எசமானுக்கு அறிவித்தான். அப்பொழுது வீ
ட்டெசமான் கோபம் அடைந்து தன் ஊழியக்கா

ரனை நோக்கி நீ சீக்கிரமாய்ப் பட்டணத்தின் தெரு
க்களிலும் வீதிகளிலும் போய்த் தரித்திரரையும் ஊ
னரையுஞ் சப்பாணிகளையுங் குருடரையும் இங்கே
அழைத்துக்கொண்டு வாவென்றான்.
௨௨ அந்தப்படி ஊழியக்காரன் அழைத்து வந்து ஆ
ண்டவரே, நீர் கட்டளையிட்டபடி செய்தாயிற்று.
௨3 பின்னும் இடமுண்டென்றான். அப்பொழுது
எசமான் ஊழியக்காரனுடனே சொன்னது, நீ வ
ழிகளிலும் வேலிகள் அருகேயும் புறப்பட்டுப்போ
ய் என் வீடு நிறைய வரும்படிக்குச் சனங்களை வரு
ந்திக் கூட்டிக்கொண்டுவா
24 அழைக்கப்பட்டிருந்த அந்த மனிதரில் ஒருவரா
கிலும் என்னுடைய விருந்தை ருசிபார்ப்பதில்லை
யென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொ
ன்னார்.
25 பின்பு அநேக சனங்கள் அவரோடே கூடப் பிர
யாணமாய்ப் போகையில் அவர் திரும்பிப் பார்த்து
அவர்களுடனே சொன்னதாவது,
26 ஒருவன் என்னிடத்தில் வந்துந் தன் தகப்பனையு
ந் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையுஞ் சகோ
தரரையுஞ் சகோதரிகளையுந் தன் சுய சீவனையும் ப
கையாவிட்டால் என் சீஷனாயிருக்கமாட்டான்.
27 அல்லாமலுந் தன் சிலுவைமரத்தைச் சுமந்து
கொண்டு எனக்குப் பின்செல்லாதவன் என் சீஷனா
யிருக்கமாட்டான்.
28 உங்களில் எவனாகிலும் ஒரு கோபுரத்தைக் கட்
ட மனதாயிருந்தால் தான் அஸ்திபாரம் போட்ட
பின்பு அதை முடியக் கட்டுகிறதற்குத் திராணியில்
லாமலிருக்கும்பொழுது,
29 அதைப் பார்க்கிறவர்கள் எல்லாரும் இந்த மனி
தன் கட்டத்தொடங்கி முடிக்கிறதற்குத் திராணியி

ல்லை யென்று தன்னைப் பரிகாசம் பண்ணாதபடிக்கு
அவன் முன்பு உழுக்கார்ந்து அதைக் கட்டித் தீ 30
ர்க்கிறதற்குத் திராணியுண்டா இல்லையாவென்று அ
றியும்படி செல்லுஞ்செலவைக் கணக்குப் பாராம
லிருப்பானோ?

அல்லது எந்த இராசாவானாலும் மற்றொரு இரா 31
சனுடனே யுத்தஞ்செய்யப்போகிறதற்கு முன்பு உ
ளுக்கார்ந்து தனக்கு விரோதமாய் இருபதினாயிரஞ்
சேவகரைக்கொண்டுவருகிறவனோடே பதினாயிரஞ்
சேவகரைக்கொண்டு எதிர்க்கக் கூடுமா?

கூடாதென்று அறிந்தால் அவன் தூரத்திலிருக்கை 32
யில் தானாபதிகளை அனுப்பிச் சமாதானத்துக்காகக்
கேட்டுக்கொள்ளும்படிக்கு (அப்படிச் செய்வான
ல்லவா?)

அதுபோல உங்களில் எவனானாலுந் தனக்குண்டா 33
ன எல்லாவற்றையும் வெறுத்துவிடாவிட்டால் என்
சீஷனாயிருக்கமாட்டான்.

உப்பானது நல்லதுதான். உப்பானது சாரமற் 34
றுப்போனால் எதினாலே அது சாரமாக்கப்படும்.

அது நல்லநிலத்திலாகிலும் எருவிலாகிலும் போ 35
டப்படத் தக்கதல்ல. அதை வெளியே கொட்டிப்
போடுவார்கள். கேட்கிறதற்குக் காதுள்ளவன் கே
ட்கக்கடவனென்றார்.

௧௫. அதிகாரம்.

அன்றியுஞ் சகல ஆயக்காரரும் பாவிகளும் அவ 1
ருடைய வசனங்களைக் கேட்கும்படிக்கு அவரிடத்
திற் சேர்ந்தார்கள்.

அப்பொழுது பரிசேயரும் வேதபாரகரும் 2
மொறுமொறுத்து இவர் பாவிகளை ஏற்றுக்கொண்
டு அவர்களோடே சாப்பிடுகிறாரென்றார்கள்.

3 அவர்களுடனே அவர் சொன்ன உவமையாவது,
4 உங்களில் ஒருவன் தனக்கு உடைமையான
நூறு ஆடுகளில் ஒன்றை இழந்தால் தொண்ணூற்
றொன்பது ஆடுகளையும் வனாந்தரத்தில் விட்டுப்
போய் இழந்ததைக் கண்டுபிடிக்கும் பரியந்தந் தே
டாமலிருப்பானோ?
5 கண்டுபிடித்த பின்பு அவன் அதைச் சந்தோஷ
மாய்த் தன் தோழின்மேல் ஏற்றிக்கொண்டு வீட்டு
க்கு வந்த பொழுது,
6 சிநேகிதரையும் அயலாரையுங் கூடவர அழைத்
துக் காணமற் போன என் ஆட்டைக் கண்டுபிடித்
தேன். ஆகையால் என்னோடே கூடச் சந்தோஷ
ப்படுங்களென்பானல்லவா?
7 அதுபோல மனந்திருப்ப அகத்தியப்படாத
தொண்ணூற்றொன்பது நீதிமான்களிலும் மனந்தி
ருப்புகிற ஒரே பாவியைக்குறித்துப் பரமண்டல
த்திலுள்ளவர்களுக்குச் சந்தோஷமுண்டாகுமென்
று உங்களுக்குச் சொல்லுகிறேன்.
8 அல்லது பத்துத் திராகுமாப் பணத்தையுடைய
பெண் ஒருவளாகிலும் ஒரு திராகுமாவை இழந்தா
ல் * விளக்கைக்கொளுத்தி வீட்டைப் பெருக்கி அ
தைக் கண்டுபிடிக்கும் பரியந்தம் நன்றாய்த் தேடா
மலிருப்பாளோ?
9 கண்டுபிடித்த பின்பு அவள் சிநேகிதிகளையும் அ
யல் வீட்டுக்காரிகளையுங் கூடவரவழைத்து நானிழ
ந்த திராகுமாவைக் கண்டுபிடித்தேன். ஆகையால் எ
ன்னோடேகூடச்சந்தோஷப்படுங்களென்பாளல்லவோ?
10 அதுபோல மனந்திருப்புகிற ஒரே பாவியைக்கு

---

* திராகுமா ஒன்றிற்கு ஏறக்குறைய இரண்டு சின்னப்பணம்
ஒப்பாயிருக்கும்.

நித்துப் பராபரனுடைய தூதருக்கு முன்பாகச் ச
ந்தோஷமுண்டாயிருக்கின்றதென்று உங்களுக்குச்
சொல்லுகிறேனென்றார்.

பின்னும் அவர் சொன்னதாவது, ஒரு மனிதனு 11
க்கு இரண்டு குமாரர் இருந்தார்கள்.

அவர்களில் இளையவன் தகப்பனை நோக்கித் தகப் 12
பனே, ஆஸ்தியில் எனக்கு வரும் பங்கைத் தரவே
ண்டுமென்றான். அந்தப்படி அவன் அவர்களுக்கு
ப் பொருளைப் பங்கிட்டான்.

சில நாளுக்குப் பின்பு இளைய மகன் எல்லாவற் 13
றையுஞ் சேர்த்துக்கொண்டு தூர தேசத்திற்குப் பி
ரயாணமாய்ப் போய் அங்கே கெட்டமார்க்கமாய்
ச் சீவனம்பண்ணித் தன் ஆஸ்தியை அழித்துப்போ
ட்டான்.

எல்லாவற்றையும் அவன் செலவழித்த பின்பு அ 14
ந்தேசத்திலே மிகுந்த பஞ்சகால முண்டாயிற்று
அப்பொழுது அவனுக்குக் குறைவு வரத் தொடங்
கினபடியினாலே,

அவன் போய் அந்தத் தேசத்துக் குடிகளில் ஒ 15
ருவனைச் சேர்ந்துகொண்டான். அந்தக் குடியான
வன் அவனைத் தன் வயல்களிலே பன்றிகளை மேய்
க்கும்படிக்கு அனுப்பினான்.

அப்பொழுது பன்றிகள் தின்கிற தவிடுகளினாலே 16
தன் வயிற்றை நிரப்ப ஆசைப்பட்டான். அவற்
றையும் ஒருவனும் அவனுக்குக் கொடுக்கவில்லை.

அப்படியிருக்குங் காலத்தில் அவன் புத்தியடை 17
ந்து சொன்னதாவது, ஆ! என் தகப்பனிடத்திலே
எத்தனை கூலிக்காரர் மிகுந்த உணவை உடையவர்
களாயிருக்கிறார்கள். நான் இங்கே பசியினாலே கெ
ட்டுப்போகிறேன்.

நான் எழுந்து என் தகப்பனிடத்துக்குப் போ 18

ய்த் தகப்பனே, தேவனுக்கும் உமக்கும் விரோத
மாய்ப் பாவஞ்செய்தேன்.
19 இதுமுதல் நான் உம்முடைய குமாரனென்று
அழைக்கப்படுவதற்கு அபாத்திரனாயிருக்கிறேன்.
உம்முடைய கூலிக்காரரில் ஒருவனைப்போல என்
னை வைத்துக்கொள்ளுமென்று சொல்லவேண்டுமெ
ன்று எண்ணி,
20 எழுந்து புறப்பட்டுத் தன் தகப்பனிடத்திற்குப்
போனான். அப்பொழுது அவன் தூரமாயிருக்கை
யில் தகப்பன் அவனைக்கண்டு உருக்கமாய் இரங்கி
ஓடிவந்து அவனுடைய கழுத்தைக்கட்டிக்கொண்
டு அவனை முத்தஞ்செய்தான்.
21 குமாரன் அவனை நோக்கித் தகப்பனே, தேவ
னுக்கும் உமக்கும் விரோதமாகப் பாவஞ்செய்தே
ன். இதுமுதல் உம்முடைய குமாரனென்று அழை
க்கப்படுவதற்கு நான் பாத்திரனல்லவென்று சொ
ன்னபொழுது,
22 தகப்பன் தன்வேலைக்காரரை நோக்கி நீங்கள் (போ
ய்) முக்கியமான வஸ்திரத்தைக் கொண்டுவந்து இ
வனுக்கு உடுத்தி இவனுடைய கைக்குமோதிரத்தை
யுங் கால்களுக்குப் பாதரட்சைகளையுங் கொடுத்து,
23 பின்பு கொழுத்த கன்றைக் கொண்டுவந்து அடி
த்துச்சமையுங்கள்.
24 என் குமாரனாகிய இவன் மரித்தான். மறுபடியு
ம் உயிரோடிருக்கிறான் இவன் காணாமற்போனான்.
இப்பொழுது க'ணப்பட்டான். ஆகையால் நாம்பு
சித்து மகிழ்ச்சியாயிருக்கக்கடவோமென்றான். அ
ந்தப்படி அவர்கள் சந்தோஷிப்படத் தொடங்கினா
ர்கள்.
25 அவனுடைய மூத்தகுமாரன் வயலில் இருந்தான்.
அவன்திரும்பி வீட்டுக்குச்சமீபமாய் வந்தபொழுது

தேவாத்தியத்தையும் நடனக்களிப்பையுங் கேட்டு,
வேலைக்காரரில் ஒருவனை அழைத்து இதென்ன 26
வென்று விசாரித்தான்.
வேலைக்காரன் அவனை நோக்கி உன் சகோதரன்வ 27
ந்தான். உன் தகப்பன் அவனைச் சுகத்தோடே திரு
ம்பப் பெற்றுக்கொண்டபடியினாலே கொழுத்தக
ன்றை அடிப்பித்தானென்றான்.
அப்பொழுது அவன் கோபம் அடைந்து உள் 28
ளேபோக மனதில்லாதிருந்தான். ஆதலால் தகப்ப
ன் வெளியே வந்து அவனை மிகவும் வேண்டிக்கொ
ண்டு அழைத்தான்.
அவன் தகப்பனுக்குப் பிரத்தியுத்தரமாகச் சொ 29
ன்னது, இவ்வளவு வருஷம் நான் உமக்கு ஊழியஞ்
செய்து உமது கற்பனையை ஒருக்காலும் மீறி நட
க்கவில்லை, அப்படியிருந்தும் நான் என் சிநேகித
ரோடே மகிழ்ச்சியாயிருக்கும்படிக்கு ஒருக்காலும்
நீர் ஒரு ஆட்டுக்குட்டியை எனக்குக் கொடுக்கவில்
லையே.
உம்முடைய பொருள்களை வேசிகளோடே பட்சி 30
த்த உமது குமாரனாகிய இவன்வந்தபொழுது கொ
ழுத்த கன்றை இவனுக்காக அடிப்பித்தீரென்றான்.
அதற்குத் தகப்பன் சொன்னது, மகனே நீ எப் 31
பொழுதும் என்னோடிருக்கிறாய். அல்லாமலும் எ
னக்குண்டான யாவும் உன்னுடையவைகளாயிருக்கி
ன்றன
உன் சகோதரனாகிய இவன் மரித்தான், மறுபடியு 32
ம் உயிரோடிருக்கிறான்; காணாமற்போனான், (இப்
பொழுது) காணப்பட்டான். ஆனபடியினாலே
நாம் மகிழ்ச்சியாகிக் களிப்படைய வேண்டுமேயெ
ன்று சொன்னானென்றார்.

௰௬. அதிகாரம்.

1 அன்றியும் அவர் தம்முடைய சிஷரோடு சொன்னதாவது, ஐசுவரியமுள்ள மனிதனுக்கு ஒரு உக்கிராணக்காரனிருந்தான். அவன் எசமானுடைய ஆஸ்திகளை அழிக்கிறதாக அவனுக்கு அறிவித்தார்கள்.

2 அப்பொழுது எசமான் அவனை அழைத்து உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்பட்டிருக்கிறேன். நீ இனிமேல் உக்கிராணக்காரனாயிருக்கக் கூடாது. ஆகையால் உன் உக்கிராணக் கணக்கைக் கொடுவென்றான்.

3 அப்பொழுது உக்கிராணக்காரன் தனக்குள்ளே எண்ணிக்கொண்டதாவது, என் எசமான் உக்கிராணவிசாரிப்பை என்னிலிருந்து எடுத்துக்கொள்ளுகிறபடியினாலே என்னசெய்யலாம்? (நிலம்) கொத்துகிறதற்குப் பெலனில்லை. இரக்க வெட்கமாயிருக்கின்றது.

4 உக்கிராண விசாரிப்பை விட்டுத் தள்ளப்படும்பொழுது என்னைத் தங்கள் வீடுகளிற் சேர்த்துக் கொள்ளுகிறதற்கான (சிநேகிதர்கள்) உண்டாகும்படிக்குச் செய்ய வேண்டிய வகை தெரியவந்ததென்று எண்ணி,

5 தன் எசமானிடத்திற் கடன்பட்டவர்களை ஒருவரொருவனாக அழைத்து முதலாவது வந்தவனைநோக்கி நீ என் எசமானிடத்திற்பட்ட கடன் எவ்வளவு என்றான். அதற்கு அவன் நூறுகுடம் எண்ணெய் என்றான்.

6 அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை நோக்கி நீ உன் சீட்டை எடுத்துச் சீக்கிரமாய் உட்கார்ந்து ஐம்பதென்றெழுதென்றான்.

7 பின்பு அவன் வேறொருவனை நோக்கி நீ பட்டக

டன் எவ்வளவு என்றான். அதற்கு அவன் நூறுகல
ன் கோதும்பையென்றான். அப்பொழுது உக்கி
ராணக்காரன் அவனை நோக்கி நீ உன் சீட்டையெடு
த்து எண்பதென்று எழுதென்றான்.

அநீதியுள்ள உக்கிராணக்காரன் விவேகமாய்ச் 8
செய்தபடியினாலே எசமான் அவனைப் புகழ்ந்தான்
இவ்விதமாய் ஒளியின் பிள்ளைகளிலும் இப்பிரபஞ்
சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிகவிவேகி
களாயிருக்கிறார்கள்.

நானும் உங்களுக்குச் சொல்லுகிறதாவது, நீங்க 9
ள் மாளும்பொழுது உங்களை நித்தியமானவீடுகளிற்
சேர்த்துக்கொள்ளும்படிக்குக் கபடமுள்ள லவுகீ
கப்பொருள்களால உங்களுக்காகச் சிநேகிதரைச்
சம்பாதியுங்கள்.

கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்தி 10
லேயும் உண்மையாயிருப்பான். கொஞ்சமாய் அ
நீதிசெய்கிறவன் அநேகமாயும் அநீதிசெய்வான்.

அப்படியிருக்க, நீங்கள் கபடமுள்ள லவுகீகப் 11
பொருளிலே உண்மையில்லாமலிருந்தால் மெய்யா
ன பொருள்களை உங்களுக்கு யார் நம்பிக்கையோ
டே ஒப்புவிப்பார்கள்?

அல்லாமலும் நீங்கள் மற்றொருவனுடையதை 12
உண்மையில்லாமையாய் நடத்தினால் உங்களுக்குச்
சொந்தமாக எதையாகிலும் ஆர் உங்களுக்குக் கொ
டுப்பார்கள்?

எந்த வேலைகாரனாலும் இரண்டு எசமான்களு 13
க்கு அடிமைசெய்யமாட்டான். ஒருவனைப்பகைத்
து மற்றவனைச் சிநேகிப்பான். அல்லது ஒருவனைப்
பற்றிக்கொண்டு மற்றவனை அசட்டைபண்ணுவான்.
நீங்கள் பராபரனுக்கும் லவுகீகப் பொருளுக்கும்
அடிமையாயிருக்கமாட்டீர்களென்றார்.

14 பணத்தின்மேல் ஆசையுள்ளவர்களாகிய பரிசேயரும் இந்த வசனங்கள் யாவையுங் கேட்டு அவரைக் குறித்துப் பரிகாசம்பண்ணினார்கள்.

15 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நீங்கள் மனிதர்கள் முன்பாக உங்களை நீதிமான்களென்று காண்பிக்கிறீர்கள். ஆனாலும் பராபரன் உங்கள் இருதயங்களை அறிந்திருக்கிறார். மனிதருக்குள்ளே மேன்மையாய் எண்ணப்பட்டிருக்கின்றது பராபரனுக்கு முன்பாக அருவருப்பாயிருக்கின்றது.

16 நியாயப்பிரமாணமுந் தீர்க்கதரிசிகளுடைய பிரமாணங்களும் யோவான்வரைக்குஞ் சென்றன. அதுமுதற் பராபரனுடைய ஆளுகைசுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகின்றது. யாவருந் வலுமையாய் அதற்கு உட்படுகிறார்கள்.

17 வானமும் பூமியும் ஒழிந்துபோகிறது எளிதாயிருந்தாலும் வேதப்பிரமாணத்தில் ஒரு எழுத்தின் உறுப்புங் கெட்டுப்போகாது.

18 தன்மனைவியைத் தள்ளி வேறொருத்தியை விவாகம்பண்ணுகிறவன் விபசாரஞ் செய்கிறான். புருஷனாலே தள்ளப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ் செய்கிறான்.

19 அன்றியும் ஐசுவரியமுள்ள ஒருமனிதன் இருந்தான். அவன் இரத்தாம்பரமும் மெல்லிசான உடையுந்தரித்து அனுதினமுஞ் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான்.

20 அல்லாமலும் இலாசரு என்னப்பட்ட ஒரு தரித்திரன் இருந்தான். அவன் பருக்கள் நிறைந்த தேகமுள்ளவனாய் அந்த ஐசுவரியவானுடைய வாசலின் அருகே கிடந்து அவனுடைய போசனபாத்திரத்திலிருந்து விழும் உச்சிட்டங்களாலே தன்பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்.

அதுவுமல்லாமல் நாய்கள் வந்து அவனுடைய ப 21
ருக்களை நக்கும்.
பின்பு அந்தத் தரித்திரனானவன் மரித்துத் தேவ 22
தூதரால் ஆபிரகாமினுடைய மடியிலேகொண்டு
போய் விடப்பட்டான். ஐசுவரியவானும் மரித்து
அடக்கம்பண்ணப்பட்டான்.
பின்பு அவன் நரகத்திலே வேதனைப்படுகிறபொ 23
ழுது தன் கண்களை உயர்த்தித் தூரத்திலே ஆபிரகா
மையும் அவனுடைய மடியிலே இலாசருவையும்
கண்டு,
தகப்பனாகிய ஆபிரகாமே, இந்தச் சுவாலையிலே 24
யிருந்து வேதனைப்படுகிறேன். ஆகையால் நீர் என்
மேல் இரங்கி இலாசரு தன் விரலின் நுனியைத் த
ண்ணீரிலே தோய்த்து என்னுடைய நாவைக் குளி
ரப்பண்ணும்படிக்கு அவனை அனுப்பவேண்டுமெ
ன்று கூப்பிட்டான்.
அதற்கு ஆபிரகாம் சொன்னது, மகனே, நீ பூ 25
மியிலே உயிரோடிருந்தகாலத்திலே உனக்கு (இஷ்
டமான) நன்மைகளைப் பெற்றுக்கொண்டாயே. இ
லாசருவும் அப்படித் தீமைகளைப்பெற்றுக்கொண்
டான். அதை நினைத்துக்கொள். இப்பொழுது இ
வன் தேற்றப்படுகிறான். நீ வேதனைப்படுகிறாய்.
அதுவுமல்லாமல் இவ்விடத்தைக் கடந்து உங்க 26
ளிடத்துக்கு வரவும் அல்லது அவ்விடத்தைக்கடந்
து எங்களிடத்துக்கு வரவும் மனதுள்ளவர்களுக்கு
க் கூடாதபடிக்கு எங்களுக்கும் உங்களுக்கும் நடு
வே பெரும் பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கின்ற
தே என்றான்.
அதற்கு அவன் சொன்னது, தகப்பனே, அப்ப 27
டியானால் (பூமியிலே) எனக்கு ஐந்துபேர் சகோத
ரருண்டு. அவர்களும் வேதனையுள்ள இவ்விடத்து

க்கு வராதபடிக்கு இவன் போய் அவர்களுக்கு (இ
தைக் குறித்து) சாட்சி கொடுக்கும்பொருட்டாய்,
28 இவனை என் தகப்பனுடைய வீட்டுக்கு அனுப்பு
மென்று உம்மை வேண்டிக்கொள்ளுகிறேனென்
றான்.
29 அதற்கு ஆபிரகாஞ் சொன்னது, அவர்களுக்கு
மோசேயுந் தீர்க்கதரிசிகளுமுண்டே. அவர்களுக்
குச் செவிகொடுக்கலாமே. என்றான்.
30 அவன் சொன்னது, அப்படியல்ல தகப்பனாகிய
ஆபிரகாமே, மரித்தோரிலிருந்து ஒருவன் அவர்களி
டத்துக்குப் போனால் மனந் திருப்புவார்களென்
றான்.
31 அதற்கு அவன் சொன்னது, அவர்கள் மோசே
க்கும் தீர்க்கதரிசிகளுக்குஞ் செவிகொடாமலிருந்
தால் மரிததோரிலிருந்து ஒருவன் எழுந்து போனா
லுஞ் சம்மதக்கமாட்டார்களென்று சொன்னானெ
ன்றார்.

௰௭. அதிகாரம்.

1 அன்றியும் அவர் தமது சீஷருடனே சொன்ன
தாவது, குற்றஞ்செய்வதற்கான காரணங்கள் நட
வாமலிருக்க[illegible] கூடாதகாரியந்தான். ஆனாலும்
ஐயோ! அவைகளைச் செய்கிறவனுக்கு வேதனைவ
ரும்.
2 அவன் இந்தச் சிறியரில் ஒருவன் குற்றஞ்செய்கி
றதற்குக் காரணமாயிராதபடிக்கு அவனுடைய க
ழுத்திலே எந்திரக்கல்லைக் கட்டிச் சமுத்திரத்திலே
அமிழ்த்தினால் அவனுக்கு நலமாயிருக்கும்.
3 நீங்கள் சாவதானமாயிருக்கக்கடவீர்கள். பிற
னொருவன் உனக்கு விரோதமாய்ப் பாவஞ்செய்

னனால் அவனைக் கடிந்துகொள். அவன் மன
ஸ்தாபப்பட்டால் அவனுக்கு மன்னிப்பாயாக.
அவன் ஒருநாளிலே ஏழுதரம் உனக்கு விரோத 4
மாய்ப் பாவஞ்செய்து ஒருநாளிலே ஏழுதரம் உன்
னிடத்தில் வந்து மனஸ்தாபப்படுகிறேனென்று
சொன்னால் அவனுக்கு மன்னிப்பாயாகவென்றார்.
அப்பொழுது அப்போஸ்தலர் கர்த்தரை நோக் 5
கி விசுவாசம் எங்களுக்குள்ளே பெருகும்படி செ
ய்யுமென்றார்கள்.
அதற்குக் கர்த்தர் சொன்னது, கடுகு விதை அ 6
வ்வளவு விசுவாசம் உங்களுக்கு உண்டாயிருந்தால்
நீங்கள் இந்தக் காட்டத்திமரத்தை நோக்கி வேரு
டனே பிடுங்கப்பட்டுக் கடலில் நாட்டப்படுவாயா
க என்று சொல்ல, அது உங்களுக்குக் கீழ்ப்படியும்.
அன்றியும் உங்களில் எவனாகிலும் உழுதலையாவ 7
து மேய்த்தலையாவது செய்கிற (தன்) வேலைக்கா
ரனை வயலிலிருந்து வரக் (காணும்) பொழுது நீ
போய்ச் சாப்பிடுவென்று உடனே அவனுக்குச்
சொல்லுவான்?
நீ எனக்காக இராப்போசனத்தை எத்தனம்ப 8
ண்ணிக் கச்சைக் கட்டிக்கொண்டு நான் போசன
பானம்பண்ணுமளவும் எனக்கு ஊழியஞ் செய்.
பின்பு நீ போசன பானம்பண்ணலாமென்றல்லவா
அவனுடனே சொல்லுவான்?
அந்த வேலைக்காரன் தனக்குக் கட்டளையிட்ட 9
வைகளைச் செய்கிறபடியினாலே எசமான் அவனை
உபசாரஞ்செய்வானா? அப்படிச் செய்யமாட்டா
னென்று நினைக்கிறேன்.
அப்படிப்போல நீங்களும் உங்களுக்குக் கட்ட 10
ளையிடப்பட்ட யாவையுஞ் செய்த பொழுதும் நா
ங்கள் உபசாரம் பெற்றுக்கொள்ளுதற்கான ஊழி

பக்காரரல்ல. எங்களுக்குக் கட்டளையிடப் பட்ட
தை மாத்திரஞ் செய்தோமேயென்று சொல்லுவீர்
களாகவென்றார்.
11 அன்றியும் அவர் எருசலேமுக்குப் பிரயாணமா
யிப் போகையில் சமாரியா நாட்டின் வழியாயுங் க
லிலேயா நாட்டின் வழியாயும் நடந்து,
12 ஒரு கிராமத்திற் பிரவேசிக்கிற பொழுது குஷ்
டரோகமுள்ள பத்துப்பேர் அவருக்கு எதிராக வ
ந்து தூரத்திலே நின்று,
13 இயேசுவே, ஐயரே, எங்கள்மேல் இரங்குமென்
று கூப்பிட்டார்கள்.
14 அவர்களை அவர் கண்டு நீங்கள் போய் உங்களை
ஆசாரியருக்குக் காண்பியுங்களென்றார். அந்தப்ப
டி அவர்கள் போகையில் சுத்தமானார்கள்.
15 அப்பொழுது அவர்களில் ஒருவன் தான் ஆரோ
க்கியம் அடைந்ததைக் கண்டு,
16 திரும்பி மிகுந்த சத்தத்துடனே பராபரனைத்
துதித்து அவருடைய பாதத்தின் அருகே சாஷ்டா
ங்கமாய் விழுந்து அவருக்குத் தோத்திரஞ் செலு
த்தினான்.
17 அவன் சமாரியா தேசத்தான். அப்பொழுது
இயேசுவானவர் சொன்னது, பத்துப்பேருமல்ல
வோ சுத்தமானார்கள். ஒன்பதுபேரெங்கே?
18 பராபரனுக்குத் துதியைச் செலுத்தும்படிக்கு
இந்த அந்நியனே ஒழிய மற்றொருவனுந் திரும்பி
வரவில்லையாவென்று சொல்லி,
19 அவனை நோக்கி நீ எழுந்துபோ. உன் விசுவாச
ம் உன்னை இரட்சித்ததென்றார்
20 பராபரனுடைய ஆளுகை எப்பொழுது வரு
மென்று பரிசேயர் அவரிடத்தில் விசாரித்தபொ
ழுது அவர் அவர்களுக்கு மறுமொழியாகச் சொ

ல்லாது, பராபரனுடைய ஆளுகை வேடிக்கைப் பி
ரகாரமாக வாராது.

இதோ இங்கேயென்றும் அதோ அங்கேயென் 21
றுஞ் சொல்லமாட்டார்கள். பராபரனுடைய ஆ
ளுகை உங்களுக்குள்ளிருக்கின்றதே என்றார்.

பின்னுஞ் சீஷருடனே அவர் சொன்னது, மனி 22
தகுமாரனுடைய நாட்களில் ஒன்றைக் காணும்படி
க்கு நீங்கள் ஆசைப்படுங் காலம் வரும். அதைக்
காணாமலிருப்பீர்கள்.

அப்பொழுது சிலர் உங்களை நோக்கி இதோ இ 23
ங்கே இருக்கிறாரென்றும் அதோ அங்கேயிருக்கிறா
ரென்றுஞ் சொல்லுங் காலத்தில் நீங்கள் புறப்படா
மலும் பின் செல்லாமலுமிருங்கள்.

மின்னலானது வானத்தின் ஒரு பக்கத்திலிருந்து ம 24
ற்றொரு பக்கம்வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல
மனிதனுடைய குமாரன் தன்னுடைய நாளில் இரு
ப்பார்.

அதற்கு முன்பு அவன் அநேகம் பாடுகளை அனு 25
பவித்து இந்தச் சந்ததியினாலே தள்ளப்படவேண்
டியிருக்கின்றது.

நோவாவின் நாட்களில் நடந்ததுபோல மனித 26
குமாரனுடைய நாட்களிலும் நடக்கும்.

நோவா பேழைக்குட் பிரவேசித்த நாள்வரைக்கு 27
ஞ் சனங்கள் போசனபானம்பண்ணியும் பெண்
கொண்டும் பெண்கொடுத்தும் வந்தார்கள். அந்
நாளிலே சலப்பிரளயம் வந்து எல்லாரையும் அழி
த்தது.

உலோத்தினுடைய நாட்களில் நடந்ததுபோல 28
வும் நடக்கும், சனங்கள் போசனபானம்பண்ணி
யும் பொருள்களைக் கொண்டும் விற்றுஞ் செடிகளை
நாட்டியும் (வீடுகளைக்) கட்டியும் வந்தார்கள்.

29 உலோத்து என்பவன் சோதோமூரைவிட்டுப் புறப்பட்டநாளிலே வானத்திலிருந்து அக்கினியுங் கந்தகமும் பெய்து எல்லாரையும் அழித்தது.

30 மனிதனுடைய குமாரன் வெளிப்படும் நாளில் அப்படியேயிருக்கும்.

31 அந்தநாளிலே வீட்டின்மேலிருப்பவன் வீட்டுக்குள்ளிருக்கிற தன் பண்டங்களை எடுத்துக்கொண்டு போகும்படிக்கு இறங்காமற் போகக்கடவன். அன்றியும் வயலிலிருப்பவன் பின்னிட்டுத் திரும்பாமற் போகக்கடவன்.

32 உலோத்தினுடைய மனைவியை நினையுங்கள்.

33 எவனானாலுந் தன் சீவனை இரட்சித்துக்கொள்ளத் தேடினால் அதை இழந்துபோவான். எவனானாலும் அதை இழந்தால் அதைக் காத்துக்கொள்ளுவான்.

34 அந்த இராத்திரியில் ஒரே படுக்கையின்மேற் கிடக்கும் இரண்டுபேரில் ஒருவன் பிடித்துக்கொள்ளப்படுவான் மற்றவன் விட்டுவிடப்படுவான்.

35 மாவை அரைக்கும் இரண்டு பெண்களில் ஒருத்தி பிடித்துக்கொள்ளப்படுவாள், மற்றவள் விட்டுவிடப்படுவாள்.

36 வயலிலிருக்கும் இரண்டுபேரில் ஒருவன் பிடித்துக்கொள்ளப்படுவான், மற்றவன் விட்டுவிடப்படுவானென்று உங்களுக்குச் சொல்லுகிறேனென்று சொன்னபொழுது,

37 அவர்கள் அவரை நோக்கி ஆண்டவரே, எங்கே என்றார்கள். அதற்கு அவர் சொன்னது, பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் சேருமென்றார்.

௰அ. அதிகாரம்.

1 அன்றியும் அவர்கள் சோர்ந்துபோகாமல் எப்பொழுதுஞ் செபம்பண்ண வேண்டுவதைக் குறித்து அவர் அவர்களுக்குச் சொன்ன, உவமையாவது,

2 ஒரு பட்டினத்திலே ஒரு நியாயாதிபதி பராபரனுக்குப் பயப்படாமலும் மனிதரை எண்ணாமலும் இருந்தான்.

3 அல்லாமலும் அந்தப்பட்டினத்திலே ஒரு கைம்பெண்ணிருந்தாள். அவள் அவனிடத்திற் போய் எனக்கு விரோதியானவனிடத்திற் பழிவாங்க வேண்டுமென்றாள்.

4 அவன் அநேக நாள் மனதில்லாதிருந்தான். பின்பு அவள் அவனிடத்தில் அதிகமாய்க் கேட்டபடியினாலே அவன் தனக்குள்ளே எண்ணினது, நான் பராபரனுக்குப் பயப்படாமலும் மனிதரை எண்ணாமலுமிருந்தும்,

5 இந்தக் கைம்பெண் என்னைத் தொந்தரவு பண்ணுகிறபடியால் நான் இவளுக்காகப் பழிவாங்கவேண்டும். இல்லாவிட்டால் இவள் எப்பொழுதும் வந்து என்னை வருத்தப்படுத்துவாளென்று எண்ணினானென்று கர்த்தர் சொல்லி,

6 பின்பு அநீதியுள்ள அந்த நியாயாதிபதி சொன்னதைச் சிந்தியுங்கள்.

7 அந்தப்படி பராபரன் தாந் தெரிந்துகொண்டவர்களைக் குறித்துத் தாமதித்துத் தம்மை நோக்கி இரவும் பகலுங் கூப்பிடுகிற அவர்களுக்காகப் பழிவாங்காமலிருப்பாரா?

8 சீக்கிரத்தில் அவர்களுக்காகப் பழிவாங்குவாரென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆகிலும் மனிதனுடைய குமாரன் வரும்பொழுது பூமியிலே

விசுவாசத்தைக் காண்பாரோவென்றார்.
9 அன்றியுந் தங்களை நீதிமான்களென்று நம்பி மற்
றவர்களை அற்பமாயெண்ணின சிலருக்கு அவர்
சொன்ன உவமையாவது,
10 இரண்டு மனிதர் செபம்பண்ணும்படிக்குத் தே
வாலயத்திற்குப் போனார்கள். அவர்களில் ஒருவ
ன் பரிசேயன். மற்றவன் ஆயக்காரன்.
11 பரிசேயனானவன் தனித்து நின்று பண்ணின
செபமாவது, பராபரனே, நான் பறிகாரர் அநீதர்
விபசாரர் இப்படிப்பட்ட மற்ற மனிதரைப்போ
லவும் இந்த ஆயக்காரனைப்போலவும் இராதவனா
படியினாலே உமக்குத் தோத்திரஞ் செலுத்துகி
றேன்.
12 வாரத்துக்குள்ளே இரண்டுதரம் உபவாசிக்கிறே
ன். எனக்குண்டான யாவற்றிலும் பத்திலொன்றை
ச் செலுத்துகிறேனென்றான்.
13 பின்பு ஆயக்காரன் தூரமாய் நின்று தன் கண்க
ளையும் வானத்துக்கு உயர்த்தத் துணியாமல் தன்
மார்பிலே அடித்துக்கொண்டு பராபரனே பாவி
யாகிய என்மேல் இரக்கமாய் இருமென்றான்.
14 அவனல்ல இவனே நீதிமானாக்கப்பட்டவனாய்த்
தன் வீட்டுக்குத் திரும்பிப்போனானென்று உங்களு
க்குச் சொல்லுகிறேன். தன்னை உயர்த்துகிறவன்
தாழ்த்தப்படுவான். தன்னைத் தாழ்த்துகிறவனே
உயர்த்தப்படுவானென்றார்.
15 பின்பு குழந்தைகளை அவர் தொடும்படிக்கு அவ
ரிடத்திற்கொண்டுவந்தார்கள். சீஷர் அதைக் கண்
டு அவர்களை அதட்டினார்கள்.
16 இயேசுவானவர் அவைகளைக் கொண்டுவரும்படி
கட்டளையிட்டுச் சொன்னது, பிள்ளைகள் என்னிடத்
தில் வருகிறதற்குத் தடைபண்ணாமல் இடங்கொடு

ங்கள். பராபரனுடைய இராச்சியம் அப்படிப்ப
ட்டவர்களை உடையதே.

எவனாகிலும் பிள்ளையைப் போலப் பராபரனு 17
டைய இராச்சியத்தை ஏற்றுக்கொள்ளாவிட்டால்
அதிற் பிரவேசிக்கமாட்டானென்றார்.

அப்பொழுது தலைவனொருவன் அவரை நோக்கி 18
நல்லபோதகரே, நித்திய சீவனைச் சுதந்தரித்துக்கொ
ள்ளும்படிக்கு நான் என்ன செய்யவேண்டுமென்
று கேட்டான்.

அதற்கு இயேசுவானவர் சொன்னது, நீர் என்னை 19
நல்லவனென்று ஏன் சொல்லுகிறீர்? பராபரனொரு
வரே அல்லாமல் மற்றொருவனும் நல்லவனல்லவே.

விபசாரம்பண்ணாதிருப்பாயாக. கொலைசெய்யா 20
திருப்பாயாக. களவுசெய்யாதிருப்பாயாக. பொ
ய்ச்சாட்சி சொல்லாதிருப்பாயாக. உன் தகப்பனை
யும் உன் தாயையுங் கனம்பண்ணுவாயாகவென்று
சொல்லுகிற கற்பனைகளை அறிந்திருக்கிறீரேயென்
றார்.

அதற்கு அவன் அவையெல்லாம் என் சிறுவயது 21
முதற் கைக்கொண்டிருக்கிறேன் என்றான்.

இயேசுவானவர் அதைக்கேட்டு அவனுடனே 22
சொன்னது, பின்னும் ஒன்றைநீர் செய்யவேண்டி
யதாயிருக்கின்றது. உமக்கு உண்டானவைகளை எல்
லாம் நீர் விற்றுப் பரமண்டலத்திலே உமக்குப்
பொக்கிஷமுண்டாயிருக்கும்படிக்குத் தரித்திரரு
க்குப்பங்கிட்டுக் கொடுத்துப் பின்பு வந்து எனக்
குப் பின்செல்லவேண்டுமென்றார்.

அவன் மிகுந்த ஐசுவரியவானானபடியினாலே அ 23
ந்த வசனத்தைக் கேட்டபொழுது மிகுந்த துக்க
ம் அடைந்து (போனான்.)

அவன் மிகுந்த துக்கம் அடைந்ததை இயேசுவா 24

னவர் கண்டு சொன்னதாவது, ஆஸ்திகளையுடைய
வர்கள் பராபரனுடைய இராச்சியத்திற் பிரவேசி
ப்பது மிகவும் அரிது.
25 ஒட்டகமானது ஒரு ஊசியின்காதிலே நுழைவது
எளிதானால் ஐசுவரியவான் பராபரனுடைய இராச்
சியத்திற் பிரவேசிக்கிறதும் எளிதாயிருக்குமென்
றார்.
26 அதைக் கேட்டவர்கள் சொன்னது, அப்படியா
னால் யார் இரட்சிக்கப்படுவார்கள் என்றார்கள்.
27 அதற்கு அவர் சொன்னது, மனிதரால் ஆகமா
ட்டாதவைகள் பராபரனாலே ஆகுமென்றார்.
28 அப்பொழுது பேதுரு அவரை நோக்கி இதோ
நாங்கள் எல்லாவற்றையும் விட்டு உமக்குப் பின்
சென்று வருகிறோமென்றான்.
29 அதற்கு அவர் சொன்னது, பராபரனுடைய இ
ராச்சியத்தின் நிமித்தமாக வீட்டையாவது தாய் த
கப்பன் மாரையாவது சகோதரரையாவது மனை
வியையாவது பிள்ளைகளையாவது விட்ட யாவரும்,
30 இம்மையிலே அதிக மடங்காயும் மறுமையிலே
நித்திய சீவனையும் அடையாமல் இருப்பதில்லையெ
ன்றார்.
31 பின்பு அவர் பன்னிருவரைச் சேர்த்துக்கொண்
டு அவர்களுடனே சொன்னது இதோ எருசலேமு
க்குப்போகிறோம். அங்கே மனிதனுடைய குமா
ரனைக் குறித்துத் தீர்க்கதரிசிகளால் எழுதப்பட்ட
யாவும் நிறைவேறும்.
32 எப்படியெனில் அவன் புறத்தேசத்தாருக்கு ஒ
ப்புக்கொடுக்கப்பட்டுப் பரியாசமும் நிந்தையும்
அடைந்து துப்பப்படுவான்.
33 அல்லாமலும் அவனை வாரினால் அடித்துக் கொ
லைசெய்வார்கள். மேலும் மூன்றும் நாளிலே உயி

ரோடெழுந்திருப்பானென்றார்.

அவர்கள் இவைகளிலொன்றையும் உணரவில்லை 34
அவைகளின் பொருள் அவர்களுக்கு மறைவாயிரு
ந்தது. அவர் சொன்னவைகளை அறியாமலிருந்தா
ர்கள்.

அவர் எரிகோவூருக்குச் சமீபமானபொழுது வ 35
ழியருகே உளுக்கார்ந்து பிச்சை கேட்டுக்கொண்டி
ருக்கிற ஒரு குருடன்,

சனங்கள் நடக்கிறதைக் கேள்விப்பட்டு இதென் 36
னவென்று விசாரித்தான்.

நாசரேத்தூரானாகிய இயேசு நடந்துபோகிறா 37
ரென்று அவனுக்கு அறிவித்தார்கள்.

அப்பொழுது அவன் இயேசுவே, தாவீதின் கு 38
மாரனே, எனக்கு இரங்குமென்று அதிகமாய்க் கூ
ப்பிட்டான்.

முன்னடப்பார் அவன் பேசாமலிருக்கும்படிக் 39
கு அவனை அதட்டினார்கள். அவன் தாவீதின் கு
மாரனே; எனக்கு இரங்குமென்று அதிகமாய்க் கூ
ப்பிட்டான்.

அப்பொழுது இயேசுவானவர் நின்று அவனைத் 40
தம்மிடத்திற் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.
அவன் கிட்ட வந்தபொழுது அவர் அவனை நோக்கி,

நான் உனக்கு என்ன செய்யவேண்டுமென்றிரு 41
க்கிறாய் என்றார். அதற்கு அவன் ஆண்டவரே, நா
ன் பார்வை அடையும்படி செய்யவேண்டும் என்
றான்.

இயேசுவானவர் அவனை நோக்கி நீ பார்வை அ 42
டைவாயாக. உன் விசுவாசம் உன்னை இரட்சித்த
தென்றார்.

உடனே அவன் பார்வையடைந்து பராபரனைப் 43
புகழ்ந்து அவருக்குப் பின்சென்றான். அதைக்கண்

ட சனங்கள் எல்லாரும் பராபரனுக்குத் துதி செ
லுத்தினார்கள்.

௰௯. அதிகாரம்.

1 பின்பு அவர் எரிகோவூரிற் பிரவேசித்து அப்பு
றம் நடந்துபோனார்.
2 அப்பொழுது ஆயக்காரருக்குத் தலைவனுமாய்
ஐசுவரியவானுமாயிருந்த சக்கேயு என்னப்பட்ட
மனிதன் இயேசுவானவரை அறியும்படிக்கு அவ
ரைப்பார்க்க வகைதேடினான்.
3 அவன் குட்டையனானபடியாற் சனக்கூட்டத்தி
லே அவரைக் காணக்கூடாமலிருந்தது.
4 அப்பொழுது அவன் அவரைப் பார்க்கும்படிக்
கு முன்னாக ஓடி அவர் செல்லுகிற வழியிலே நிற்கி
ன்ற காட்டத்திமரத்தின்மேல் ஏறினான்.
5 இயேசுவானவர் அந்த இடத்திற் சென்றபொழு
து அண்ணாந்துபார்த்து அவனைக் கண்டு சக்கேயு
வே, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்
டும். ஆகையால் நீ சீக்கிரமாயிறங்கி வாவென்றார்.
6 அந்தப்படி அவன் சீக்கிரமாயிறங்கிச் சந்தோஷ
த்தோடே அவருக்கு உபசாரஞ் செய்தான்.
7 அதைக் கண்ட அனைவருஞ் சொன்னது, இவர்
பாவியான மனிதனிடத்திலே தங்கும்படிக்குப்
போகிறாரென்று முறுமுறுத்தார்கள்.
8 சக்கேயு என்பவன் நின்று கர்த்தரை நோக்கி, ஆ
ண்டவரே, என் ஆஸ்திகளிற் பாதியை ஏழைகளுக்
குக் கொடுக்கிறேன். அல்லாமலும் நான் ஒருவனி
டத்தில் எதையாகிலும் அநியாயமாய் எடுத்திருந்
தேனானால் நாலுமடங்காய்ப் பதிற்செலுத்துகிறே
னென்றான்.
9 அப்பொழுது இயேசுவானவர் அவனைக் குறித்

றுச் சொன்னது இழந்து போனதைத் தேடி இர
ட்சிக்கும்படிக்கு மனிதனுடைய குமாரன் வந்திரு
க்கிறபடியினாலே இன்றைக்கு இந்தக் குடும்பத்திற்
கு இரட்சிப்பு உண்டாயிற்று.
இவனும் ஆபிரகாமினுடைய சந்ததியானல்லவா 10
வென்றார்.
அன்றியும் அவர்கள் இவைகளைக் கேட்டுக்கொ 11
ண்டிருக்கையில் அவர் எருசலேமுக்குச் சமீபமா
னபடியினாலும் பராபரனுடைய ஆளுகை சீக்கிர
மாகக் காணப்படுமென்று அவர்கள் நினைத்தபடி
யினாலும் அவர் சொன்ன உவமையாவது,
உயர் குலத்தானாகிய ஒருவன் ஒரு இராச்சியத் 12
தைப்பெற்றுக்கொண்டு பின்பு திரும்பிவரும்படிக்
குத் தூரதேசத்துக்குப் போக மனதாய்,
தன்னுடைய பத்து ஊழியகாரரை அழைத்து 13
அவர்களுக்குப் பத்திறாத்தல் திரவியங்கொடுத்து
நான் வருகிற வரைக்கும் இதினாலே தொழில் செ
ய்யுங்களென்று சொல்லிப் போனான்.
அவனுடைய பட்டினத்தார் அவனைப் பகைத்து 14
அவன் எங்களை ஆளுகைசெய்ய எங்களுக்கு மனதி
ல்லையென்று சொல்லும்படிக்கு அவனுக்குப் பின்
னாகத் தானாதிபதிகளை அனுப்பினார்கள்.
அப்படியிருந்தும் அவன் இராச்சியத்தைப்பெ 15
ற்றுக்கொண்டு திரும்பி வந்து தான் திரவியங்கொ
டுக்கப்பெற்றிருந்த அந்த ஊழியக்காரர் தொழில்
செய்ததினாலே ஆதாயமாக்கிக்கொண்டது இவ்வள
வென்று அறியும்படிக்கு அவர்களைத் தன்னிடத்து
க்கு அழைத்துவரச் சொன்னான்.
அந்தப்படியே முந்தினவன் சேர்ந்து ஆண்டவ 16
னே, உம்முடைய றாத்தல் பத்துறாத்தலை ஆதாயம்
பண்ணிற்று என்றான்.

17 அவனுடனே எசமான் சொன்னது, நல்லது உ
த்தம ஊழியக்காரனே, நீ கொஞ்சத்திலே உண்
மையாயிருந்தபடியினாலே பத்துப் பட்டினங்களு
க்கு அதிகாரியாயிருவென்றான்.
18 பின்பு இரண்டாம் ஊழியக்காரன் சேர்ந்து ஆண்
டவனே, உம்முடைய றாத்தல் ஐந்துறாத்தலை ஆதா
யம்பண்ணிற்று என்றான்.
19 அவனுடனேயும் அவன் சொன்னது, நீயும் ஐந்
துபட்டினங்களுக்கு அதிகாரியாயிருவென்றான்.
20 பின்பு வேறொருவன் சேர்ந்து ஆண்டவனே, நீர்
வையாததை எடுக்கிறவருமாய் விதையாததை அறு
க்கிறவருமாயிருக்கிற கடினமுள்ள மனிதனாயிருக்
கிறதை நான் அறிந்தும் உமக்குப் பயப்பட்டபடி
யினாலே,
21 உம்முடைய றாத்தலை ஒரு சேலையிலே வைத்துக்
கொண்டேன். இதோ அது இருக்கின்றதென்றான்.
22 அவனுடனே அவன் சொன்னது, பொல்லாத
ஊழியக்காரனே, உன் வாக்கின்படி உனக்கு நியா
யத்தீர்ப்புக்கொடுக்கிறேன். நான் வையாததை எடு
க்கிறவனுமாய் விதையாததை அறுக்கிறவனுமாயி
ருக்கிற கடினமுள்ள மனிதனென்றறிந்தாயே,
23 ஆகையால் நான் திரும்பி வருகிறபொழுது என்
திரவியத்தை வட்டியோடே பெற்றுக்கொள்ளும்
படிக்கு நீ அதை (வட்டிக்காக) காசுக்கடையிலே
ஏன் கொடுக்கவில்லையென்று சொல்லி,
24 சமீபமாய் நிற்கிறவர்களை நோக்கி, நீங்கள் அந்
த றாத்தலை இவனிலிருந்து எடுத்துப் பத்துறாத்த
லுள்ளவனுக்குக் கொடுங்களென்று கட்டளையிட்ட
பொழுது,
25 அவர்கள் ஆண்டவனே, அவனுக்குப் பத்துறாத்த
லுண்டேயென்க,

அவன் பின்னுஞ் சொன்னது, நான் உங்களுக்கு 26
ச்சொல்லுகிறதாவது, உள்ளவனுக்குக்கொடுக்கப்
படும். இல்லாதவனுக்கு உண்டாயிருக்கிறதும் அ
வனிலிருந்து எடுக்கப்படும்.

அன்றியும் நான் தங்களுக்கு இராசாவாயிருக்க 27
மனதில்லாமலெனக்குச் சத்துருக்களான அவர்க
ளை இங்கே கொண்டுவந்து எனக்கு முன்பாக வெ
ட்டிப்போடுங்களென்று சொன்னேனென்றார்.

இவைகளை அவர் சொன்ன பின்பு அவர் எருச 28
லேமுக்குப் போகும்படி முன்னே நடந்தார்.

அப்படி அவர் ஒலிவமலையென்னப்பட்ட மலை 29
யின் அருகேயிருக்கிற பெதுபாகே ஊருக்குப்பெ
த்தானியா ஊருக்குஞ் சமீபமானபொழுது அவர்
தமது சிஷரில் இருவரை நோக்கி,

அதோ உங்களுக்கு எதிராயிருக்கிற கிராமத்துக் 30
குப் போங்கள். அதிற் பிரவேசிக்கும்பொழுது ம
னிதரில் ஒருவனாகிலும் ஒருக்காலும் ஏறாத கழுதை
க்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள். அதை
அவிழ்த்துக்கொண்டுவாருங்கள்.

இதை ஏன் அவிழ்க்கிறீர்களென்று ஒருவன் உங்க 31
ளிடத்திற் கேட்டால் ஆண்டவருக்கு இது வேண்டு
மென்று அவனுக்குச் சொல்லுங்கள் என்றார்.

அந்தப்படி அனுப்பப்பட்டவர்கள் போய்த் தங் 32
களுக்கு அவர் சொன்னபிரகாரமாகக் கண்டார்கள்.

கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்கிறபொழு 33
து அதின் எசமான்கள் அவர்களை நோக்கிக் குட்டி
யையேன் அவிழ்க்கிறீர்களென்றார்கள்.

அதற்கு அவர்கள் ஆண்டவருக்கு இது வேண்டு 34
மென்று சொல்லி,

அதை இயேசுவினிடத்திற்குக் கொண்டுவந்து த 35
ங்கள் வஸ்திரங்களைக் குட்டியின்மேற்போட்டு இ

பேசவை அதின்மேலேற்றினார்கள்.
36 அப்படி அவர் போகையில் அவர்கள் தங்கள் வ
ஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள்.
37 அல்லாமலும் அவர் ஒலிவமலையின் அடிவாரமா
யிச் சேர்ந்து வருகிறபொழுது சீஷரின் கூட்டத்தா
ரெல்லாருந் தாங்கள் கண்ட சகல அற்புதங்களையுங்
குறித்துச் சந்தோஷப்பட்டு மிகுந்த சத்தத்துட
னே பராபரனைத் துதிக்கத் தொடங்கிப் பராபர
னுடைய நாமத்தினாலே வருகிற இராசா தோத்திரி
க்கப்பட்டவர்.
38 பரமண்டலத்திற் சமாதான சவுக்கியமும் உன்ன
தங்களிற் புகழ்தலும் உண்டாவதாக என்றார்கள்.
39 அப்பொழுது கூட்டத்திலிருந்த பரிசேயரிற் சி
லர் அவரை நோக்கிப் போதகரே, நீர் உம்முடைய
சீஷரை அதட்டவேண்டும் என்றார்கள்.
40 அவர்களுக்கு மறுமொழியாக அவர் சொன்ன
து, இவர்கள் பேசாமலிருந்தாற் கல்லுக்களே கூப்
பிடுமென்று உங்களுக்குச்சொல்லுகிறேனென்றார்.
41 அன்றியும் அவர் பட்டினத்துக்குச் சமீபமான
பொழுது அவர் அதைப் பார்த்து அதைக் குறித்
துக் கண்ணீர்விட்டு நீ உனக்குக் கிடைத்த இந்த
நாளிலே உன் சமாதானத்துக்கு எற்றவைகளைச் சி
ந்தித்துக்கொண்டால் நலமாயிருக்கும்.
42 இப்பொழுது அவைகள் உன் கண்களுக்கு ம
றைவாயிருக்கின்றன.
43 உன்னைச் சந்திக்குங்காலத்தை நீ சிந்தித்துக்கொ
ள்ளாமலிருக்கிறபடியினாலே உன் சத்துருக்கள் உ
ன்னைச் சூழ மதிள்போட்டு உன்னை வளைந்துகொ
ண்டு,
44 எங்கும் உன்னை இறுகப்பிடித்து உன்னையும் உ
ன்னிலுள்ளவர்களையுந் தரையாக்கி உன்னிடத்திற்

ஒரு கல் மற்றொரு கல்லின் மேல் இராதபடிக்குச்
செய்யும் நாட்கள் உனக்கு வருமென்றார்.
பின்பு அவர் தேவாலயத்திற் பிரவேசித்து, 45
அதிலே விற்கிறவர்களையுங் கொள்ளுகிறவர்களை 46
யும் நோக்கி, தம்முடைய ஆலயம் செபம்பண்ணு
வதற்கான ஆலயமென்று எழுதியிருக்கின்றதே. நீ
ங்கள் இதைக் கள்ளர் குகை யாக்கினீர்களென்று
சொல்லி அவர்களைப் புறம்பே துரத்தினார்.
அல்லாமலும் நாடோறும் அவர் தேவாலயத்தி 47
லே உபதேசம் பண்ணிக்கொண்டிருந்தார். அப்
பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரகருஞ்
சனத்தின் மூப்பரும் அவரைக் கொலைசெய்ய வ
கைதேடி,
சனங்களெல்லாரும் மிகுந்த சிந்தையோடே அ 48
வருக்குச் செவிகொடுத்தபடியினாலே வகையைக்
காணாமற்போனார்கள்.

௨௰. அதிகாரம்.

அந்நாட்களில் ஒரு நாளிலே அவர் தேவாலயத் 1
திற் சனங்களுக்கு உபதேசம்பண்ணிச் சுவிசேஷத்
தைப் பிரசங்கிக்கிறபொழுது பிரதான ஆசாரியரு
ம் வேதபாரகரும் மூப்பரும் அவருக்கு விரோத
மாய் வந்து நின்று,
அவரை நோக்கி நீர் எந்த அதிகாரத்தினால் இவை 2
களைச் செய்கிறீர்? இப்படிப்பட்ட அதிகாரத்தை
உமக்குக் கொடுத்தவர் இன்னாரென்று எங்களுக்கு
ச் சொல்லுமென்றார்கள்.
அதற்கு மாறுத்தரமாக அவர் சொன்னது, நா 3
னும் உங்களிடத்தில் ஒரே வினவைக் கேட்பேன்.
என்னவென்றால், யோவான் கொடுத்த ஸ்நானந் 4
தேவனால் உண்டாயிற்றோ? மனிதரால் உண்டாயி

றீர்கள்? அதை எனக்குச் சொல்லுங்களென்றார்.
5 அப்பொழுது அவர்கள் தங்களுக்குள்ளே யோ
சனைபண்ணினதாவது,
6 தேவனால் உண்டாயிற்றென்று நாம் சொன்னால்
நீங்கள் அவரை ஏன் விசுவாசிக்கவில்லை என்பார்.
அது மனிதரால் உண்டாயிற்றென்று நாம் சொன்
னால் எல்லாச் சனங்களும் யோவானைத் தீர்க்கதரி
சியென்று எண்ணிக்கொள்ளுகிறபடியினாலே நம
துமேற் கல்லெறிவார்களென்று யோசனைபண்ணி,
7 பின்பு அது வந்த விதம் எங்களுக்குத் தெரியா
தென்றார்கள்.
8 அதற்கு இயேசுவானவர் சொன்னது அப்படி
யானால் நான் இன்ன அதிகாரத்தினாலே இவைகளை
ச் செய்கிறேனென்று நானும் உங்களுக்குச் சொ
ல்லமாட்டேன் என்றார்.
9 பின்பு அவர் சனங்களுடனே சொன்ன உவமை
யாவது, ஒரு மனிதன் திராட்சத்தோட்டத்தை உ
ண்டாக்கி அதைத் தோட்டக்காரர் வசமாய் விட்டு
அநேககாலமாய்ப் புறத்தேசம்போயிருந்தான்.
10 தகுதியான காலத்திலே அந்தத் தோட்டக்கார
ர் திராட்சத் தோட்டத்தின் கனிகளில் ஒரு பங்கை
த் தனக்குக் கொடுத்து அனுப்பும்படிக்கு அவன்
ஒரு ஊழியக்காரனை அவர்களிடத்துக்கு அனுப்பி
னான். அந்தத் தோட்டக்காரர் அவனை அடித்து
வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.
11 பின்பு அவன் வேறொரு ஊழியக்காரனை அனுப்
பினான். அவனையும் அவர்கள் அடித்து நிந்தைப்ப
டுத்தி வெறுமையாய் அனுப்பிவிட்டார்கள்.
12 அதன் பின்பு அவன் மூன்றும் ஊழியக்காரனை
அனுப்பினான். அவனையும் அவர்கள் காயப்படுத்
தித் துரத்தினார்கள்.

அப்பொழுது திராட்சத்தோட்டத்தின் எசமான் 13
எண்ணினது, நான் என்ன செய்யலாம், எனக்குப்
பிரியமான குமாரனை அனுப்பினால் அவர்கள் கண்
டு கனஞ்செய்வார்களென்றெண்ணி அவனை அனுப்
பினான்.
தோட்டக்காரர் அவனைக் கண்டபொழுது இவ 14
ன் சுதந்தரவாளி சுதந்தரம் நம்முடையதாகும்படிக்
கு இவனைக் கொலைசெய்ய வேண்டுமென்று தங்க
ளுக்குள்ளே யோசனைபண்ணி,
வாருங்களென்று சொல்லி அவனைத் திராட்சத் 15
தோட்டத்துக்கு வெளியே தள்ளிக் கொலைசெய்
தார்கள். ஆதலால் திராட்சத் தோட்டத்தின் எச
மான் அவர்களை என்ன செய்வான்?
அவன்வந்து அந்தத் தோட்டக்காரரை அழித்துத் 16
திராட்சத் தோட்டத்தை வேறு மனிதருக்குக் கொ
டுப்பானல்லவா என்றார். அதை அவர்கள் கேட்டு
அப்படி ஆகாதிருப்பதாக என்றார்கள்.
அப்பொழுது அவர் அவர்களைப் பார்த்து வீடு 17
கட்டுகிறவர்கள் ஆகாதென்று தள்ளின கல்லே கோ
டிக்குத் தலையான கல்லாயிற்றென்று எழுதியிருக்கி
ற வேதவாக்கியத்தின் கருத்தென்ன?
அந்தக் கல்லின் மேல்விழுகிறவன் எவனோ அவ 18
ன் நொறுக்கப்படுவான். அன்றியும் அது விழப்ப
டுபவன் எவனோ அவனை நசுக்கிப்போடும் என்றார்.
அப்பொழுது தங்களைக் குறித்து அந்த உவமை 19
யைச் சொன்னார் என்று பிரதான ஆசாரியரும் வே
தபாரகரும் அறிந்து அந்நேரத்திலே அவர்மேல்
கைகளைப் போட விரும்பினார்கள். சனங்களுக்குப்
பயப்பட்டபடியால் (நிறுத்தினார்கள்.)
பின்பு அவர்கள் அவரையே நோக்கிக்கொண்டு 20
ஆளுகைக்கும் நியாயாதிகாரத்துக்கும் முன்பாக

அவரை ஒப்புக்கொடுக்கிறதற்கு ஏதுவாக அவரு
டைய வசனத்திற் குற்றங் கண்டுபிடிக்கும்படிக்குத்
தங்களை நீதிமான்கள்போலக் காண்பிக்கிற வேவுகா
ரரை அவரிடத்தில் அனுப்பினார்கள்.
21 அவர்கள் வந்து அவரை நோக்கிப் போதகரே,
நீர் செம்மையாய்ப் பேசி உபதேசிக்கிறவர் என்று
ம் பட்சபாதமில்லாமற் சத்தியமாய்ப் பராபரனு
டைய மார்க்கத்தைப் போதிக்கிறவர் என்றும் அறி
ந்திருக்கிறோம்.
22 நாம் இராயனுக்கு வரிகொடுக்கலாமோ கொடா
மல் இருக்கலாமோ என்று அவரிடத்திற் கேட்டார்
கள்.
23 அவர்களுடைய தந்திரத்தை அவர் அறிந்து அவர்
களை நோக்கி நீங்கள் என்னை என் சோதிக்கிறீர்கள்?
24 பணத்தை எனக்குக் காண்பியுங்கள். அதில் இ
ருக்கிற சொரூபமும் மேலெழுத்தும் ஆருடைய
வைகளென்றார். அவை இராயனுடையவைகள் எ
ன்று மாறுத்தாரஞ் சொன்னார்கள்.
25 அவர் சொன்னது, அப்படியானால் நீங்கள் இரா
யனுடையதை இராயனுக்கும் பராபரனுடையதை
ப் பராபரனுக்குஞ் செலுத்துங்களென்றார்.
26 அவர்கள் அவரைச் சனங்களுக்கு முன்பாக ஒரு
வசனத்தில் அகப்படுத்தக் கூடாமல் அவருடைய
மாறுத்தாரத்தைக் குறித்து ஆச்சரியப்பட்டு மவுன
மாயிருந்தார்கள்.
27 பின்பு மறுமையாகிய உயிரோடெழும்புதல் இல்
லை என்று சொல்லுகிற சதுசேயரிற் சிலர் அவரிட
த்தில் வந்து கேட்டதாவது,
28 போதகரே, பெண்ணை விவாகம்பண்ணின ஒரு
வன் பிள்ளை இல்லாமல் இறந்து போனால் அவனு
டைய மனைவியை அவனுடைய சகோதரன் (சேர்

ந்து) தன் சகோதரனுக்குச் சந்ததி உண்டாக்க வேண்டும் என்று மோசே நமக்குக் கட்டளையாக எழுதினாரே,

அந்தப்படி (ஓரிடத்திலே) சகோதரர் ஏழுபேரிருந்தார்கள். அவர்களில் மூத்தவன் ஒரு பெண்ணை விவாகம்பண்ணிப் பிள்ளை இல்லாமல் இறந்துபோனான். 29

அப்பொழுது இரண்டாஞ் சகோதரன் அந்தப் பெண்ணை விவாகம்பண்ணி அவனும்பிள்ளை இல்லாமல் இறந்துபோனான். 30

மூன்றாஞ் சகோதரன் முதல் ஏழுபேர் வரைக்கும் அந்தப்படியே அவளை விவாகம்பண்ணிப் பிள்ளைகளைப் பெறாமல் இறந்துபோனார்கள். 31

அவர்களெல்லாருக்கும் பின்பு அந்தப் பெண்ணும் இறந்துபோனாள். 32

இவ்விதமாய் ஏழு பேரும் அவளை விவாகம்பண்ணினவர்களாய் இருக்க (மரித்தோர்) உயிரோடெழுந்திருக்குங் காலத்தில் அவர்களில் எவனுக்கு அவள் மனைவியாய் இருப்பாளென்றார்கள். 33

அவர்களுக்கு மாறுத்தரமாக இயேசுவானவர் சொன்னது, இம்மையில் இருக்கிறவர்கள் பெண் கொண்டுங் கொடுத்தும் வருகிறார்கள். 34

மறுமையிலுள்ள பாக்கியத்தையும் மரித்தோரிலிருந்து எழுந்திருக்குதலையும் அடைவதற்குப் பாத்திரராய் எண்ணப்படுபவர்கள் பெண்கொள்வதுங் கொடுப்பதுமில்லை. 35

என்னத்தினாலெனில் அவர்கள் உயிரோடெழுந்திருக்கத் தக்கவர்களாய் இருக்கத் தேவதூதருக்கு ஒப்பானவர்களுமாய்ப் பராபரனுடைய பிள்ளைகளுமாய் இருப்பதால் அவர்கள் இனி மரிக்கக்கூடாதிருப்பார்களே. 36

37 அன்றியும் மரித்தோர் எழுந்திருப்பார்கள் என்
பதை மோசேயும் முட்செடியைக் குறித்து எழுதி
ன சரித்திரத்திலே காண்பித்தார். எப்படியெனில்
அவர் பராபரனை ஆபிரகாமுடைய தேவனென்றும்
ஈசாக்கினுடைய தேவன் என்றும் யாக்கோபினு
டைய தேவனென்றுஞ் சொல்லி இருக்கிறார்.
38 பராபரன் மரித்தோருடைய தேவனாய் இராமற்
சீவனுள்ளோருடைய தேவனாயிருக்கிறார். அவர்க
ளெல்லாரும் அவருக்குப் பிழைத்திருக்கிறார்களே
என்றார்.
39 வேதபாரகரிற் சிலர் அதைக்கேட்டுப் போதக
ரே, நன்றாய்ச் சொன்னீர் என்றார்கள்.
40 பின்பு அவர்கள் அவரிடத்தில் வேறொன்றைக்கே
ட்கத் துணியவில்லை.
41 அப்பொழுது அவர் அவர்களை நோக்கிக் கிறிஸ்
துவானவர் தாவீதின் குமாரனாய் இருப்பார் என்று
என்னத்தினாலே சொல்லுகிறார்கள்?
42 அல்லாமலும் பராபரன் என் கர்த்தாவை நோக்கி
நான் உம்முடைய சத்துருக்களை உமது பாதபடி
யாக்கிப்போடுமளவும்,
43 நீர் எனது வலதுபாரிசத்தில் உளுக்காரும் என்
றொன்று தாவீதுதானே சங்கீதப் புத்தகத்திற்
சொல்லி இருக்கிறாரே.
44 தாவீது அவரைக் கர்த்தரென்று சொல்லியிருக்க
எப்படி அவர் அவனுடைய குமாரனாவாரென்றார்.
45 அப்பொழுது சனங்கள் எல்லாருங் கேட்க அவ
ர் தம்முடைய சீஷருடனே சொன்னதாவது,
46 நீளமான வஸ்திரங்களைத் தரித்து நடக்கமனதாய்
இருந்து சந்தைகளில் வாழ்த்துதலையும் செப ஆல
யங்களில் முதல் ஆசனங்களையும் விருந்துகளில் மு
தலிடங்களையும் விரும்பிக்,

கைம்பெண்களுடைய பொருள்களைப் பட்சித்து 47
வஞ்சகமாய் விஸ்தாரமான செபம்பண்ணி வருகிற
வேதபாரகருக்கு நீங்கள் இடங்கொடாமல் எச்சரிக்
கையாய் இருங்கள். அவர்களே அதிக ஆக்கினையை
அடைவார்களென்றார்.

உக. அதிகாரம்.

பின்பு அவர் கண்ணையுயர்த்திப் பார்க்கிற பொ 1
ழுது ஐசுவரியவான்கள் தங்கள் காணிக்கைகளைத் த
ருமப் பெட்டியிற் போடுகிறதைக் கண்டார்.
அல்லாமலும் இரண்டு காசை அதிலே போட்ட ௨
ஒரு ஏழைக் கைம்பெண்ணையும் அவர் கண்டு,
இந்த ஏழைக் கைம்பெண் மற்றெல்லாரிலும் அ 3
திகம் போட்டாள் என்று மெய்யாய் உங்களுக்குச்
சொல்லுகிறேன்.
எப்படியெனில் அவர்கள் எல்லாருந் தங்கள் பரி 4
பூரணத்தில் எடுத்துத் தேவ காணிக்கைப் பெட்டி
யிற் போட்டார்கள். இவள் தன் குறைவிலே தன்
சீவனத்துக்குண்டான யாவையும் போட்டாளென்
றார்.
பின்பு சிலர் தேவாலயத்தைக் குறித்து அது அ 5
ழகான கல்லுக்களாலும் காணிக்கைகளாலும் அலங்
கரிக்கப்பட்டிருக்கின்றதென்று சொன்னபொழுது
அவர் சொன்னது.
நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு 6
கல்லின்மேல் இராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படு
ம் நாட்கள் வரும் என்றார்.
அப்பொழுது அவரை அவர்கள் நோக்கிப் போ 7
தகரே, அவைகள் எப்பொழுது நடக்கும்? அவைக
ள் சம்பவிக்குங் காலத்துக்கு அடையாளம் என்ன
வென்று கேட்டார்கள்.

8 அதற்கு அவர் சொன்னது, அநேகர் என் நாமத்
தை எடுத்துத் தங்களை அவரே என்றுங் காலஞ் ச
மீபமாய் வந்ததென்றுஞ் சொல்லுவார்கள். நீங்கள்
வஞ்சிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையுள்ளவர்களா
ய் அவர்களுக்குப் பின்செல்லாமலிருங்கள்.
9 அல்லாமலும் யுத்தங்களையுங் கலகங்களையுங் குறி
த்துக் கேள்விப்படும்பொழுது திகிலடையாதிருங்
கள். அப்படிப்பட்டவைகள் முன்னடக்கவேண்டு
மே. ஆனாலும் முடிவு உடனேவராதென்று சொல்
லிப் பின்பு திருவுளம்பற்றினதாவது,
10 ஒரு சனக்கூட்டம் மற்றொரு சனக்கூட்டத்துக்
கும் ஒரு இராச்சியத்தார் மற்றொரு இராச்சியத்
தாருக்கும் விரோதமாக எழும்புவார்கள்.
11 அல்லாமலும் பல இடங்களிலே பூமி மிகவும் அ
திர்தலும் பஞ்சங்களும் பெருவாரிக் காய்ச்சல்களு
ம் உண்டாயிருக்கும். வானத்தில் இருந்து பயமு
ண்டாக்குகிற காரியங்களும் பெரிய அடையாளங்க
ளும் உண்டாகும்.
12 அவைகள் எல்லாவற்றிற்கு முன்னே என்னுடை
ய நாமத்தின் நிமித்தம் அவர்கள் உங்கள் மேலே தங்
கள் கைகளைப்போட்டு உங்களைத் துன்பப்படுத்திச்
செப ஆலயங்களுக்குஞ் சிறைச்சாலைகளுக்கும் ஒப்பு
க்கொடுத்து இராசாக்களுக்குந் துரைகளுக்கும்
முன்பாகக் கொண்டுபோவார்கள்.
13 ஆனாலும் அது நீங்கள் சாட்சிகொடுக்கும்படிக்
கு ஏதுவாயிருக்கும்.
14 ஆகையால் எப்படி மாறுத்தரவு சொல்லலாமெ
ன்று நீங்கள் கவலைப்படாதிருக்கும்படி உங்கள் ம
னதைத் திடப்படுத்துங்கள்.
15 நானே உங்களுக்கு (தகுதியான) பேச்சையும்
ஞானத்தையுங் கொடுப்பேன். உங்கள் எதிராளிகள்

யாவரும் அதற்கு விரோதமாய்ப் பேசவும் எதிர்
நிற்கவுமாட்டார்கள்.
அன்றியும் பெற்றாராலுஞ்சகோதரராலும் இன 16
த்தாராலுஞ் சிநேகிதராலுங்காட்டிக்கொடுக்கப்படு
வீர்கள் உங்களிற் சிலரைக் கொலைசெய்விப்பார்கள்.
என் நாமத்தினாலே நீங்கள் சகலவிதமான மனித 17
ராலும் பகைக்கப்படுவீர்கள்.
ஆனாலும் உங்கள் தலையின் மயிர் ஒன்றாகிலும் அ 18
ழியாது.
பொறுமையினாலே உங்கள் ஆத்துமாக்களைக் கா 19
த்துக்கொள்ளக்கடவீர்கள்.
அன்றியுஞ் சேனைகளால் எருசலேம் வளைக்கப் 20
பட்டிருக்கிறதை நீங்கள் காணும்பொழுது அதின்
அழிவு சமீபமாயிற்றென்றறியுங்கள்.
அப்பொழுது யூதேயா நாட்டில் இருப்பவர்க 21
ள் மலைகளுக்கு ஓடிப் போகவும் எருசலேமுக்குள்
ளே இருப்பவர்கள் வெளியே புறப்படவும் நாட்டு
ப்புறங்களில் இருப்பவர்கள் அதற்குட் பிரவேசியா
மல் இருக்கவுங் கடவர்கள்.
எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படியாய் அந் 22
நாட்களே பழிவாங்குதற்கானவைகளாய் இருக்கும்.
அந்நாட்களில் ஐயோ! கருப்பவதிகளுக்கும் மு 23
லைகொடுக்கிறவர்களுக்கும் வேதனையுண்டாயிருக்கு
ம். என்னத்தினாலெனில் இத்தேசத்தின்மேல் மிகு
ந்த இடுக்கணும் இந்தச் சனத்தின்மேற் கோபாக்கி
னையும் உண்டாகும்
கட்கங்களினாலே அற்று விழுவார்கள். அல்லாமலு 24
ம் புறத்தேசத்தார் யாவருக்குள்ளேயுஞ் சிறைப்ப
ட்டுப் போவார்கள். அன்றியும் புறத்தேசத்தாரு
டைய காலங்கள் நிறைவேறுகிற வரைக்கும் எருச
லேம் புறத்தேசத்தாராலே மிதிக்கப்படும்.

25 சூரியனிலுஞ் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும், பூமியின்மேல் உள்ள சனங்களுக்குள்ளே கலக்கமான உபத்திரவம் உண்டாகும். சமுத்திரமும் அலைகளுங் கோஷ்டமாயிருக்கும்.

26 வானத்திற் பலமானவைகளும் அசையும். ஆதலாற் பூலோகத்தின்மேல் வருகிற காரியங்களுக்குப் பயந்து அவைகளை நோக்கிப் பார்க்கிறதினாலே மனிதர்கள் சோர்ந்து போவார்கள்.

27 அப்பொழுது மனிதனுடைய குமாரனை மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் மேகத்தில் வரக் காண்பார்கள்.

28 அவைகள் சம்பவிக்கத் தொடங்கும் பொழுது உங்கள் மீட்புச் சமீபமாய் வருவதால் நீங்கள் நிமிர்ந்து உங்கள் தலைகளை உயர்த்தக்கடவீர்கள் என்று சொல்லி,

29 பின்பு உவமையாய்ச் சொன்னதாவது, அத்திமரத்தையும் மற்றச் சகல மரங்களையும் பாருங்கள்.

30 அவைகள் தளிர்க்கிறதை நீங்கள் காணும்பொழுது வசந்தகாலஞ் சமீபமாயிற்றென்று அறிகிறீர்கள்.

31 அந்தப்படியே நான் சொன்னவைகள் சம்பவிக்கிறதை நீங்கள் காணும்பொழுது பராபரனுடைய ஆளுகை சமீபமாயிற்றென்று அறியக்கடவீர்கள்.

32 அவையெல்லாஞ் சம்பவிக்கிறவரைக்கும் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாய் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

33 வானமும் பூமியும் ஒழிந்துபோம். என் வசனங்கள் ஒழிந்து போகாது.

34 அன்றியும் பூமியில் எங்குங் குடியிருக்கிற அனைவர்மேலும் அந்த நாள் ஒரு வலையைப்போல வருவதால்,

உங்கள் இருதயங்கள் பெருந்தீனியினாலும் வெ 35
றியினாலும் பிழைப்பின் கவலையினாலும் பாரம் அ
டையாதபடிக்கும் அந்த நாள் உங்களுக்குச் சடுதி
யாய் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருக்கக்கடவீ
ர்கள்.

ஆகையால் இனிச் சம்பவிப்பவைகள் யாவுக்கும் 36
நீங்கள் தப்பிக்கொண்டு மனிதனுடைய குமாரனு
க்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்கள் என்று எ
ண்ணப்படும்படிக்கு எக்காலமுஞ் செபம்பண்ணி
விழித்திருக்கக்கடவீர்களென்றுதிருவுளம்பற்றினர்.

அன்றியும் அவர் பகற்காலங்களிலே தேவாலயத் 37
தில் உபதேசித்துக்கொண்டு இராக்காலங்களிலே
வெளியே போய் ஒலிவ மலையென்னப்பட்ட மலை
யிலே தங்கிவந்தார்.

அவருடைய உபதேசத்தைக் கேட்கும்படிக்கு 38
ச் சனங்கள் எல்லாரும் அதிகாலையிலே தேவாலயத்
தில் அவரிடத்துக்கு வந்தார்கள்.

உஉ. அதிகாரம்.

பஸ்கா என்னப்பட்ட புளியாத அப்பப்பண்டி 1
கை சமீபமாயிற்று.

அப்பொழுது பிரதான ஆசாரியரும் வேதபாரக 2
ருஞ் சனங்களுக்குப் பயப்பட்டபடியினாலே அவ
ரைக் கொலைசெய்யும்படிக்கு (இரகசியமாய்) வ
கைதேடினார்கள்.

அக்காலத்திலே பன்னிருவரில் ஒருவனாகிய இஸ் 3
காரியோத்தென்று பேர்கொண்ட யூதாவுக்குள்ளே
சாத்தான் புகுந்தான்.

ஆதலால் அந்த யூதாவென்பவன் பிரதான ஆசா 4
ரியரும் ஆலயத்தலைவருமானவர்களிடத்திற் போய்

அவர்களுக்கு அவரைக் காட்டிக்கொடுக்கும் வகை
யைக் குறித்து அவர்களுடனே யோசனைபண்ணிக்
கொண்டான்.
5 அவர்கள் சந்தோஷிப்பட்டு அவனுக்குத் திரவி
யங் கொடுக்கத் தீர்மானித்தார்கள்.
6 அதற்கு அவன் பொருந்திச் சனக்கூட்டமில்லாத
பொழுது அவரை அவர்களுக்குக் காட்டிக் கொடு
க்கும்படிக்குத் தகுதியான காலத்தைத் தேடினான்.
7 பஸ்காவின் ஆட்டுக்குட்டியைப் பலியிட வேண்
டிய புளியாத அப்ப நாள் வந்தது.
8 அப்பொழுது அவர் பேதுருவையும் யோவானை
யும் அழைத்து நாம் பஸ்காவைப் பொசிக்கும்படி
க்கு நீங்கள் போய் நமக்காக அதை எத்தனம்பண்
ணுங்களென்றார்.
9 அதற்கு அவர்கள் நாங்கள் அதை எங்கே எத்தன
ம்பண்ண விரும்புகிறீர் என்றார்கள்.
10 அவர் சொன்னது, நீங்கள் பட்டினத்துக்குட் பி
ரவேசிக்கும் பொழுது ஒருவன் தண்ணீர்க்குடஞ்
சுமந்து கொண்டு உங்களுக்கு எதிர்ப்படுவான். நீ
ங்கள் அவனுக்குப் பின்சென்று அவன் போகும் வீ
ட்டிலே போய்,
11 அந்த வீட்டெசமானை நோக்கி நான் என் சிஷி
ரோடுங்கூடப் பஸ்காவைப் பொசிக்கத் தக்கதான
இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்திற் கேட்
கச் சொன்னார் என்று சொல்லுங்கள்.
12 அவன் கம்பள முதலானவைகள் விரித்திருக்கிற
விஸ்தாரமான மேல்வீட்டை உங்களுக்குக் காண்பி
ப்பான். அங்கே எத்தனம்பண்ணுங்கள் என்று அ
னுப்பினார்.
13 அவர்கள் போய் அவர்சொன்ன பிரகாரமாகக்கண்
டு பஸ்கா போசனத்தை எத்தனம் பண்ணினார்கள்.

தகுதியான நேரம் வந்தபொழுது அவரும் அவ 14
ருடனே பன்னிரண்டு அப்போஸ்தலரும் பந்தியி
ல் இருந்தார்கள்.
அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நான் பா 15
டுபடுகிறதற்கு முன்னே உங்களுடனே கூட இந்த
ப் பஸ்கா போசனம்பண்ண மிகவும் ஆசையாயிரு
ந்தேன்.
என்னத்தினாலென்றால் பராபரனுடைய இராச்சி 16
யத்திலே அது நிறைவேறும் அளவும் நான் பின்னு
ம் இதிற் பொசிப்பதில்லை என்று உங்களுக்குச் சொ
ல்லுகிறேனென்று சொல்லி,
பின்பு பாத்திரத்தை எடுத்துக் கொண்டு தோத் 17
திரஞ்செய்து,
பராபரனுடைய ஆளுகை வருமளவும் நான் ம 18
றுபடியுந் திராட்ச இரசத்திலே பானம் பண்ணுவ
தில்லை என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆ
கையால் நீங்கள் இதை எடுத்து உங்களுக்குள்ளே
பங்கிட்டுக்கொள்ளுங்கள் என்றார்.
அல்லாமலும் அவர் அப்பத்தை எடுத்துக்கொ 19
ண்டு தோத்திரம் பண்ணி அதைப் பிட்டு அவர்களு
க்குக் கொடுத்து உங்களுக்காகக் கொடுக்கப்படுகி
ற என்னுடைய சரீரமாயிருக்கின்றது. என்னை நி
னைக்கிறதற்காக இப்படிச் செய்யுங்கள் என்று சொ
ல்லி இராப்போசனம் பண்ணின பின்பு,
அந்தப்படியே பாத்திரத்தையுங் கொடுத்து இந் 20
தப் பாத்திரம் உங்களுக்காகச்சிந்தப்படுகிற என் இ
ரத்தத்தினாலே புதிய உடம்படிக்கையாய் இருக்கி
ன்றதென்று சொல்லி,
பின்பு இதோ என்னைக் காட்டிக் கொடுக்கிறவனு 21
டைய கை என்னுடனே கூடப் பந்தியில் இருக்கின்
றது.

22 தீர்மானத்தின்படியே மனிதனுடைய குமாரன்
போகிறான். அதுமெய்தான். ஆனாலும் ஐயோ! அ
ந்த மனிதன் அவனைக் காட்டிக்கொடுக்கிறானோ அ
ந்த மனிதனுக்கு வேதனை வருமென்றார்.
23 அப்பொழுது அவர்கள் தம்மில் யாவன் அப்ப
டிச் செய்வானென்று தங்களுக்குள்ளே விசாரிக்கத்
தொடங்கினார்கள்.
24 அன்றியும் அவர்கள் தங்களில் எவன் பெரியவனா
ய் இருப்பானென்று தங்களுக்குள்ளே வாக்குவாத
ம்பண்ணிக் கொண்டிருந்த பொழுது,
25 அவர் அவர்களுக்குச் சொன்னதாவது புறத்
தேசத்தாருடைய இராசாக்கள் அவர்களைப் ப
லபந்தமாய் ஆண்டு கொள்ளுகிறார்கள். அல்லாம
லும் அவர்கள்மேல் அதிகாரஞ் செலுத்துகிறவர்க
ள் தருமத் துரைகள் என்று அழைக்கப்படுகிறார்கள்.
26 உங்களுக்குள்ளே அப்படி இருக்கக் கூடாது.
உங்களிற் பெரியவன் சிறியவனைப் போலவுந் தலை
வன் ஊழியக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்.
27 பந்தியில் இருக்கிறவன் ஊழியஞ் செய்கிறவன்
இவ்விருவரில் எவன் பெரியவன்? பந்தியில இருக்
கிறவனல்லவா? ஆனாலும் நான் உங்களுக்குள்ளே
ஊழியஞ் செய்கிறவனைப் போல இருக்கிறேன்.
28 மேலும் எனக்கு வந்த துன்பகாலங்களில் என்
னுடனே இருந்தவர்கள் நீங்களே.
29 ஆகையால் என் பிதா எனக்கு ஒரிராச்சியத்தை
ஏற்படுத்தி இருக்கிறபடியால்,
30 நீங்கள் என் இராச்சியத்தில் என் பந்தியிலே போ
சனபானம்பண்ணி இஸ்ரவேலின் பன்னிரண்டு கோ
த்திரத்தாருக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கிறவர்க
ளாய் ஆசனங்களின் மேல் உட்காரும்படிக்கு நா
ன் உங்களை ஏற்படுத்துகிறேனென்றார்.

கர்த்தர் பின்னுஞ் சொன்னதாவது, சீமோனே, 31
சீமோனே, கோதுமையைச் சுளகிலேற் புடைக்கிற
து போல உங்களைப் புடைக்கும்படிக்குச் சாத்தா
ன் உத்தரவு கேட்டான்.

நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக் 32
கு உனக்காக வேண்டிக்கொண்டேன். அந்தப்ப
டி நீ இனிமேல் மனந்திரும்பின பின் உன் சகோத
ரரை ஸ்திரப்படுத்துவாயாகவென்றார்.

அதற்கு அவன் சொன்னது, ஆண்டவரே, உம் 33
மோடனே கூட நான் காவலிலுஞ் சாவிலும் வர எத்
தனமாய் இருக்கிறேனென்றான்.

அவர் சொன்னது, பேதுருவே, இன்று சேவல் 34
கூவுமுன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்று
தரம் மறுதலிப்பாயென்று உனக்குச் சொல்லுகி
றேனென்றார்.

பின்னும் அவர் அவர்களுடனே சொன்னது, நா 35
ன் உங்களைப் பணப்பையுஞ் சாமான் பையும் பாத
இரட்சைகளும் இல்லாமல் அனுப்பினபொழுது ஏ
தாகிலும் உங்களுக்குக் குறைவாயிருந்ததாவென்றார்.
ஒன்றுங் குறைவாய் இருக்கவில்லையென்றார்கள்.

அவர் சொன்னது, இப்பொழுது பணப்பையை 36
யுஞ் சாமான்பையையும் உடையவன் அவைகளை எ
டுத்துக் கொள்ளக்கடவன், அல்லாமலுங் கத்தியில்
லாதவன் தன் வஸ்திரத்தை விற்று ஒன்றைக் கொள்
ளக் கடவன்.

என்னத்துக்கென்றால் என்னைக் குறித்து எழுதியி 37
ருக்கிறவைகள் முடிகிறபடியினாலே அக்கிரமக்கா
ரரோடே எண்ணப்பட்டாரென்றெழுதியிருக்கிறது.
என்னிடத்தில் நிறைவேறவேண்டுமென்று உங்களு
க்குச் சொல்லுகிறேனென்றார்.

அதற்கவர்கள் ஆண்டவரே, இதோ இரண்டு கத் 38

திகள் உண்டென்றார்கள். (அவைகளே) போது
மென்று அவர்களுடனே சொன்னார்.
39 பின்பு அவர் புறப்பட்டு வழக்கத்தின்படியே ஒ
லிவ மலைக்குப் போனார். அவருடைய சீஷரும் அ
வருக்குப் பின்சென்றார்கள்.
40 அவ்விடத்திற் சேர்ந்தபொழுது அவர் அவர்களை
நோக்கி நீங்கள் குற்றஞ்செய்வதற்கான காரணத்தி
ற் பிரவேசியாதபடிக்குச் செபம்பண்ணுங்களென்
று சொல்லி,
41 கல்லெறி தூரத்தில் அவர்களைவிட்டுப் போய்,
42 முழங்காற் படியிட்டுப் பிதாவே, உமக்குச் சித்
தமானால் இந்தப் பாத்திரம் என்னை விட்டு நீங்கும்
படி செய்யும். இல்லாவிட்டால் என்னுடைய சித்
தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே
ஆவதாகவென்று செபம்பண்ணினார்.
43 அப்பொழுது வானத்திலிருந்து ஒரு தூதன்
தோன்றி அவரைப் பலப்படுத்தினான்.
44 பின்னும் அவர் கொடிய வேதனைப் பட்டு அதி
க உக்கிரத்தோடே செபம்பண்ணினார். அப்பொ
ழுது அவருடைய வேர்வை இரத்தத் துளிகளைப்
போலாகித் தரையிலே விழுந்தது.
45 பின்பு அவர் செபம்பண்ணி முடித்தபொழுது
எழுந்திருந்து தம்முடைய சீஷரிடத்திற் போய் அ
வர்கள் துக்கத்தினாலே நித்திரை பண்ணக் கண்டு,
46 என்னத்திற்காகத் தூங்குகிறீர்கள்? நீங்கள் குற்
றஞ் செய்வதற்கான காரணத்திற் பிரவேசியாதபடி
க்கு எழுந்திருந்து செபம்பண்ணுங்களென்றார்.
47 அவர் அப்படிப் பேசுகையிற் சனங்கள் கூட்ட
மாய்ச் சேர்ந்தார்கள். அவர்களுக்கு முன்னாகப்
பன்னிருவரில் ஒருவனான யூதாவென்பவன் நடந்
துபோய் இயேசுவை முத்தஞ்செய்யும்படிக்கு அ

வரிடத்திற் சேர்ந்தான்.

அப்பொழுது இயேசுவானவர் அவனை நோக்கி 48
யூதாவே, நீ மனிதனுடைய குமாரனை முத்தத்தினு
லேயா காட்டிக்கொடுக்கிறாயென்றார்.

அல்லாமலும் அவரைச் சுற்றியிருந்தவர்கள் சம் 49
பவிப்பதை அறிந்து அவரைநோக்கி ஆண்டவரே,
கத்தியினாலே நாங்கள் வெட்டலாமாவென்று சொ
ல்ல,

(உடனே) அவர்களில் ஒருவன் பிரதான ஆசாரிய 50
னுடைய வேலைக்காரனை வலதுகாதற வெட்டினான்.

அப்பொழுது இயேசுவானவர் இம்மட்டில் நிறு 51
த்துங்களென்று சொல்லி அவனுடைய காதைத்
தொட்டு அவனைக் குணமாக்கினார்

பின்பு இயேசுவானவர் தமக்கு விரோதமாய் வ 52
ந்த பிரதான ஆசாரியரையுந் தேவாலயத் தலைவரை
யும் மூப்பரையும் நோக்கி ஒரு கள்ளனைப் பிடிக்
கப் புறப்படுகிறது போல நீங்கள் கத்திகளோடுந் த
டிகளோடும் புறப்பட்டுவந்தீர்கள்.

தினந்தோறும் நான் தேவாலயத்தில் உங்களுட 53
னே இருக்கையில் நீங்கள் என்மேற் கைகளைப்போ
டவில்லை. இதுவே உங்களுக்கேற்ற நேரமுமாய்
இருளின் வல்லமையுமாய் இருக்கின்றதென்றார்.

அப்பொழுது அவர்கள் அவரைப் பிடித்துப் பி 54
ரதான ஆசாரியனுடைய மாளிகைக்குக் கொண்டு
போனார்கள். பேதுருவுந் தூரமாக அவருக்குப்
பின்சென்றான்.

அல்லாமலும் அவர்கள் மாளிகையின் பிராகாரத்தி 55
ல் நடுவிலே நெருப்பை உண்டுபண்ணி அதைச் சு
ற்றி உளுக்கார்ந்தபொழுது பேதுருவும் அவர்க
ளுக்குள்ளே உளுக்கார்ந்தான்.

அப்பொழுது ஒரு வேலைக்காரி அவனை நெருப் 56

நிடத்தில் இருக்கக் கண்டு அவனை உற்றுப்பார்த்து இவனும் அவனோடிருந்தானென்றாள்.

57 அதற்கு அவன் ஸ்திரியே, அவனை அறியேனென்று அவரை மறுதலித்தான்.

58 சற்று நேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைக் கண்டு நீயும் அவர்களில் ஒருவனென்றான். அதற்குப் பேதுரு மனிதனே, நானல்லவென்றான்.

59 ஏறக்குறைய ஒரு மணி நேரத்துக்குப் பின்பு வேறொருவன் அவனைப் பார்த்து மெய்யாய் இவனும் அவனோடிருந்தான். இவன் கலிலேயன் தானே என்று நிச்சயத்தோடே சொன்னான்.

60 அதற்குப் பேதுரு மனிதனே நீ பேசுகிறதை அறியேனென்றான். உடனே அவன் பேசுகையிற் சேவல் கூவிற்று.

61 அப்பொழுது கர்த்தர் திரும்பிப் பேதுருவை நோக்கிப் பார்த்தார். உடனே பேதுரு சேவல் கூவுமுன்னே நீ என்னை மூன்றுதரம் மறுதலிப்பாயென்று தன்னோடே கர்த்தர் சொன்ன வசனத்தை நினைத்துக் கொண்டு,

62 வெளியே போய் மிகுந்த மனத் துக்கத்தோடே அழுதான்.

63 இயேசுவைப் பிடித்துக்கொண்ட மனிதர் அவரை அசட்டைபண்ணி,

64 அடித்து அவருக்கு முக்காடிட்டு அவருடையமுகத்தில் அறைந்து உன்னை அடித்தவன் யாவன்? அதைத் தீர்க்கதரிசனமாய்ச் சொல்லென்று சொல்லி,

65 மற்றும் அநேகவிதமாய் அவரைத் தூஷணித்தார்கள்.

66 உதயமான பொழுது சனத்தின் மூப்பரும் பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் கூடிவந்து தங்கள் ஆலோசனைச்சங்கத்தில் அவரைக் கொண்டுவரும்

படிசெய்து அவரை நோக்கி,
நீ கிறிஸ்துவானால் அதை எங்களுக்குச் சொல் 67
லென்றார்கள். அதற்கவர் நான் உங்களுக்குச் சொ
ன்னாலும் என்னை நம்பமாட்டீர்கள்.
நான் உங்களிடத்தில் விசாரித்தாலும் நீங்கள் எ 68
னக்கு மாறுத்தரவு சொல்லவும் என்னை விடுதலையா
க்கவும் மாட்டீர்கள்.
இது முதல் மனிதனுடைய குமாரன் சருவ வல் 69
லமையுள்ள பராபரனுடைய வலதுபாரிசத்தில் உ
ளுக்காருவானென்றார்.
அதற்கு அவர்கள் எல்லாரும் அந்தப்படி நீ பரா 70
பரனுடைய குமாரனோவென்றார்கள்? அவர் சொ
ன்னது, நீங்கள் சொல்லுகிறபடி நானே அவரெ
ன்றார்.
அப்பொழுது அவர்கள் சொன்னது, இனி வேறு 71
சாட்சி நமக்கு வேண்டுவதென்ன? நாந்தாமே இ
வனுடைய வாயினாலே கேட்டோமே என்றார்கள்.

உங. அதிகாரம்.

பின்பு அவர்களுடைய கூட்டத்தார் எல்லாரும் 1
எழுந்திருந்து அவரை பிலாத்தென்னுந் துரையினி
டத்துக்குக் கொண்டுபோய்,
இவன் தன்னை இராசாவாகிய கிறிஸ்தென்றுஞ் 2
சனங்கள் இராயருக்கு வரிகொடுக்க வேண்டுவதில்
லை என்றுஞ் சொல்லி அவர்களைக் கலகப்படுத்தக்
கண்டோமென்று அவர்மேற் குற்றஞ்சாற்றத் தொ
டங்கினார்கள்.
அப்பொழுது பிலாத்தென்பவன் அவரை நோக்கி 3
நீ யூதருடைய இராசாவாவென்றுகேட்டான். அதற்கு
அவர் நீர்சொல்லுகிறபடியே இருக்கின்றதென்றார்.
பின்பு பிலாத்தென்பவன் பிரதான ஆசாரியரை 4

புஞ் சனக்கூட்டத்தையும் நோக்கி இந்த மனிதனி
டத்திலே ஒரு குற்றத்தையுங் காணேனென்றான்.
5 அதற்கு அவர்கள் சொன்னது, இவன் கலிலேயா
நாட்டைத் தொடங்கி இவ்விடம் வரைக்கும் யூதே
யா நாட்டிலெங்கும் உபதேசம்பண்ணிச் சனங்களை
க் கலகப்படுத்துகிறானென்று அதிக உக்கிரத்தோ
டே சொன்னார்கள்.
6 கலிலேயா நாடென்பதைப் பிலாத்து கேள்விப்
பட்டபொழுது இம்மனிதன் கலிலேயனா என்று
விசாரித்த பின்பு,
7 அவர் ஏரோதே இராசாவின் அதிகாரத்துக்குள்
ளானவரென்று அறிந்து அந்நாட்களில் எருசலேமி
லே வந்திருந்த ஏரோதனிடத்திற்கு அவரை அனு
ப்பினான்.
8 ஏரோதென்பவன் இயேசுவைக் குறித்து மிகுந்த
காரியங்களைக் கேள்விப்பட்டிருந்த படியினாலே அ
நேகநாளாய் அவரைக் காண ஆசையாயிருந்தான்.
ஆதலால் அவன் அவரைக் கண்டபொழுது மிகவு
ஞ் சந்தோஷிப்பட்டு, அவர் செய்யும் அற்புதத்தை
ப் பார்க்கலாமென்றெண்ணி,
9 அநேக காரியங்களைக் குறித்து அவரிடத்தில் வி
னவினான். அவர் அவனுக்கு மறுமொழி ஒன்றுஞ்
சொல்லவில்லை.
10 பிரதான ஆசாரியரும் வேதபாரகரும் வந்து நி
ன்று உக்கிரமாய் அவர்மேற் குற்றஞ்சாற்றினார்கள்.
11 அப்பொழுது ஏரோதென்பவனும் அவனுடைய
போர்ச் சேவகரும் அவரை அசட்டைபண்ணிப் பி
ரகாசமுள்ள வஸ்திரத்தை அவருக்கு உடுத்தி இப்ப
டிப் பரிகாசம்பண்ணின பின்பு,
12 அவரைத் திரும்பப் பிலாத்துவினிடத்துக்கு அ
னுப்பினான். அந்த நாளிலே முன்னே ஒருவருக்

கொருவர் பகைஞராயிருந்த பிலாத்தென்பவனும்
எரோதென்பவனுஞ் சிநேகிதரானார்கள்.
அப்பொழுது பிலாத்தென்பவன் பிரதான ஆசா 13
ரியரையுந் தலைவரையுஞ் சனங்களையுங் கூடிவர
ச்செய்து அவர்களை நோக்கி,
நீங்கள் இந்த மனிதன் சனங்களைக் கலகப்படுத் 14
துகிறவனென்று சொல்லி இவனை என்னிடத்திற்
கொண்வந்தீர்கள். அந்தப்படி நான் உங்களுக்கு
முன்பாக இவனைச் சோதித்தபொழுது நீங்கள் இ
வன்மேற் குற்றஞ் சாற்றின குற்றங்களில் ஒன்றையு
ம் நான் இவனிடத்திற் காணவில்லை.
பின்பு உங்களை எரோதினிடத்துக்கு அனுப்பி 15
னேன். அவரும் இவனிற் குற்றங் காணவில்லை.
ஆதலால் இவன் மரணத்துக்கு ஏதுவானதொன் 16
ன்றுஞ் செய்யாதவனாய் இருக்கிறபடியால் நான் இ
வனைத் தண்டித்து விடுதலையாக்குவேனென்றான்.
பண்டிகை தோறும் அவன் அவர்களுக்காக ஒரு 17
வனை விடுதலையாக்க வேண்டியிருந்தபடியால் அப்
படிச் சொன்னான்.
திரளான சனங்கள் எல்லாரும் அதைக் கேட்டு 18
இவனை ஆக்கினைக்குட்படுத்திப் பரபாவை எங்களுக்
காக விடுதலையாக்கவேண்டுமென்று கூக்குரலிட்டா
ர்கள்.
அந்தப் பரபா என்பவன் நகரத்திலே நடந்த ஒ 19
ரு கலகத்துக்காகவுங் கொலை பாதகத்துக்காகவுங்
காவலில் வைக்கப்பட்டிருந்தான்.
அப்பொழுது பிலாத்தென்பவன் இயேசுவைவி 20
டுதலையாக்க மனதாய் மறுபடியும் அவர்களுக்குச்
சொன்னான்.
அதற்கவர்கள் இவனைச் சிலுவைமரத்தில் அறை 21
யவேண்டும் இவனைச் சிலுவை மரத்தில் அறைய

வேண்டுமென்று கூக்குரலிட்டார்கள்.
22 அவன் மூன்றாந்தரஞ் சொன்னது, இவன் என்ன
ப் பொல்லாங்கைச் செய்தான்? இவனிடத்திலே ம
ரணத்துக்கு ஏதுவான குற்றமொன்றையுங் காணே
மே. ஆகையால் நான் இவனைத் தண்டித்து விடுத
லைபண்ணுவேனென்றான்.
23 அப்படி இருந்தும் அவரைச் சிலுவைமரத்தில்
அறையும்படிக்கு அவர்கள் மிகுந்த சத்தத்துட
னே கேட்டுக்கொண்டார்கள். அவர்களும் பிரதா
ன ஆசாரியருமிட்ட கூக்குரல் அதிகப்பட்டது.
24 அப்பொழுது பிலாத்தென்பவன் அவர்களுடை
ய மனுவின்படியாகும்படிக்குத் தீர்மானம்பண்ணி,
25 கலகத்தினிமித்தமுங் கொலை பாதகத்தினிமித்த
முங் காவலில் வைக்கப்பட்டிருந்தவனை அவர்களு
டைய விண்ணப்பத்தின்படி அவர்களுக்காக விடுத
லையாக்கி இயேசுவானவரையே அவர்களுடைய இ
ஷ்டத்துக்கு ஒப்புக் கொடுத்தான்.
26 அந்தப்படி அவர்கள் அவரைக் கொண்டுபோகி
ற பொழுது வயலில் இருந்து வருகிற கிரேனேயூ
ரானாகிய சீமோனென்பவனைப் பிடித்துச் சிலுவை
மரத்தை இயேசின் பின் சுமந்து போகும்படி அ
வன் மேலே வைத்தார்கள்.
27 திரளான கூட்டமாகிய சனங்களும் அவருக்காக
த் துக்கமாய்ப் புலம்பி அழுகிற ஸ்திரீகளும் அவரு
க்குப் பின்சென்றார்கள்.
28 அப்பொழுது இயேசுவானவர் அவர்கள் முகமா
யத் திரும்பிச் சொன்னது, எருசலேமின் குமாரத்
திகளே, நீங்கள் எனக்காக அழாமல் உங்களுக்காக
வும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுதுகொள்ளு
ங்கள்.
29 என்னத்தினாலெனில் மலடிகளும் பிள்ளைப்பெ

ளுத கருப்பங்களும் பால்கொடாத முலைகளும் பா
க்கியமுள்ளவைகளென்று சொல்லப்படும் நாட்கள்
வரும்.

அப்பொழுது இவர்கள் மலைகளை நோக்கி எங்க 30
ள்மேல் விழுங்களென்றுங் குன்றுகளை நோக்கி எங்க
ளை மூடிக்கொள்ளுங்களென்றுஞ் சொல்லுவார்கள்.

பசுமையான மரத்துக்கு இப்படிச் செய்தாற் ப 31
ட்டுப்போன மரத்துக்கு மிகவும் அதிகமாய் இப்
படிச் செய்யப்படுமல்லவா வென்றார்.

குற்றவாளிகளாகிய வேறிரண்டுபேரும் அவரோ 32
டே கூட மரணம் அடைவதற்குக் கொண்டுபோக
ப்பட்டார்கள்.

தலையோட்டிடமென்னப்பட்ட இடத்திலே அவ 33
ர்கள் சேர்ந்த பொழுது அங்கே அவரையும் அவ
ருடைய வலதுபக்கத்திலே ஒரு குற்றவாளியையும்
அவருடைய இடதுபக்கத்திலே மற்றக் குற்றவாளி
யையுஞ் சிலுவைமரங்களில் அறைந்தார்கள்.

அப்பொழுது இயேசுவானவர் பிதாவே, இவர்க 34
ள் தங்கள் செய்கையின் தன்மையை அறியாதிருக்கி
றார்கள். ஆதலால் இவர்களுக்கு மன்னித்தருளு
மென்றார். அவருடைய வஸ்திரங்களை அவர்கள்
பங்கிட்டு (அவைகளைக்குறித்து) சீட்டுப்போட்டா
ர்கள்.

ஜனங்கள் நின்று பார்த்துக் கொண்டார்கள். அ 35
வர்களுடனே கூடத் தலைவரும் அவரை இகழ்ந்து
இவன் மற்றவர்களை இரட்சித்தான். இவன் பராப
ரனாலே தெரிந்து கொள்ளப்பட்ட கிறிஸ்துவானா
ல் தன்னைத்தானே இரட்சிக்கலாமே என்றார்கள்.

போர்ச்சேவகரும் அவரை அசட்டைபண்ண அ 36
வரிடத்திற் சேர்ந்து அவருக்குக் காடியைக் காண்
பித்து,

37 நீ யூதரின் இராசாவானால் உன்னை இரட்சித்துக்
கொள்ளென்றார்கள்.
38 அவருக்கு மேலாக இவன் யூதருடைய இராசா
வென்று கிரேக்கை, லத்தீன், எபிரேயு என்னும்
பாஷைகளால் எழுதப்பட்டிருந்தது.
39 அல்லாமலுந் தூக்கிப்போடப்பட்ட குற்றவாளி
களில் ஒருவன் அவரைத் தூஷணித்து நீ கிறிஸ்து
வானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொ
ள்ளென்றான்.
40 அப்பொழுது மற்றவன் அவனுடனே சொன்ன
து, இந்த ஆக்கினைக்குள்ளாயிருக்கிற நீயும் பராபர
னுக்குப் பயப்படாமலா இருக்கிறாய்? நாம் நம்மு
டைய நடக்கைகளுக்குத் தகுதியாக இந்த ஆக்கினை
யை நியாயமாய் அடைகிறோம்.
41 இவர் தகாததொன்றையும் நடப்பிக்க வில்லையெ
ன்று அவனைக் கடிந்துகொண்டு,
42 பின்பு இயேசுவுடனே சொன்னது, ஆண்டவரே
நீர் உம்முடைய இராச்சியத்திற் சேரும்பொழுது
அடியேனை நினைத்தருளுமென்றான்.
43 அவனுடனே இயேசுவானவர் சொன்னது, இன்
றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசில இருப்பா
யென்று மெய்யாய் உனக்குச் சொல்லுகிறேனெ
ன்றார்.
44 பின்பு ஏறக்குறைய ஆறுமணிநேரமாயிற்று. (அ
துமுதல்) ஒன்பதாம்மணிநேரம் வரைக்கும் அந்த
த் தேசத்தில் எங்கும் அந்தகாரமுண்டாகச் சூரிய
ன் இருள் அடைந்தது.
45 அல்லாமலுந் தேவாலயத்திலுள்ள திரைச்சீலை
நடுவிலே கிழிந்துபோயிற்று.
46 அல்லாமலும் இயேசுவானவர் பிதாவே, உம்மு
டைய கைகளில் என் ஆவியை ஒப்புக்கொடுக்கிறே

னென்று யிருந்த சத்தத்தோடே கூப்பிட்டு அதின் பின்பு சீவனை விட்டார்.

அப்படிச் சம்பவித்தவைகளைப் படைத்தலைவன் 47
கண்டு மெய்யாய் இந்த மனிதன் நீதிமானாயிருந்தா
னென்று பராபரனைத் துதிசெய்தான்.

அல்லாமலும் அந்தச் சங்கதியைப் பார்க்கக் கூ 48
டிவந்திருந்த சனங்கள் எல்லாருஞ் சம்பவித்தவைக
ளைப் பார்த்தபொழுது தங்கள் மார்புகளில் அடித்
துக்கொண்டு திரும்பினார்கள்.

அன்றியும் அவருக்கு அறிமுகமானவர்களெல்லா 49
ருங் கலிலேயாவில் இருந்து அவருக்குப் பின்சென்
று வந்த ஸ்திரிகளுந் தூரத்திலே நின்று அவைகளை
ப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

பின்பு யூதருடைய பட்டினமாகிய அரிமத்தியா 50
ஊரானுமாய் உத்தமமும் நீதியுமுள்ளவனுமாய்ப்
பராபரனுடைய ஆளுகை வரக் காத்திருந்தவனு
மாய்,

யூதர்களுடைய ஆலோசனைக்குஞ் செய்கைக்கும் 51
சம்மதியாத ஆலோசனைக்காரனுமாயிருந்த யோ
சேப்பென்பவன் பிலாத்துவினிடத்திற் போய்,

இயேசுவின் சரீரத்தைக் கேட்டு, 52

அதை இறக்கி மெல்லிய புடைவையிலே சுற்றிக் 53
கல்மலையில் வெட்டப்பட்டதுமாய் ஒருக்காலும் ஒ
ருவனையும் வைக்கப்படாததுமாயிருந்த ஒரு கல்ல
றையிலே வைத்தான்.

அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது. ஓய்வுநாளு 54
ம் ஆரம்பமாயிற்று.

கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திரு 55
ந்த ஸ்திரிகள் அவனுக்குப் பின்சென்று கல்லறை
யையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்
தையும் பார்த்து,

56 பின்பு திரும்பிப் போய்ச் சுகந்த வருக்கங்களையும் பரிமள தயிலங்களையும் எத்தனம்பண்ணிக் கற்பனைப்படியே ஓய்வுநாளில் ஓய்ந்திருந்தார்கள்.

---

௨௪. அதிகாரம்.

1 வாரத்தின் முதல் நாள் அதிகாலையிலே அவர்கள் தாங்கள் எத்தனம்பண்ணின சுகந்தவருக்கங்களை எடுத்துக்கொண்டு வேறு சில ஸ்திரிகளுங் கூடக் கல்லறையினிடத்திற்சென்று,

2 அதின் மேல் இருந்த கல்லு தள்ளப்பட்டிருக்கிறதைக் கண்டு,

3 உட்பிரவேசித்துக் கர்த்தராகிய இயேசுவின் சரீரத்தைக் காணாமல்,

4 அதைக் குறித்து மிகுந்த கலக்கம் அடைந்துகொண்டிருக்கையில்,

5 பிரகாசமான வஸ்திரங்களையுடைய இரண்டுபேர் அவர்களருகே நின்றார்கள்.

6 அப்பொழுது அந்த ஸ்திரிகள் பயந்து தரையை நோக்கிக் குனிந்து நிற்கையில் அவ்விரண்டுபேரும் அவர்களை நோக்கி உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் என்னத்தினாலே தேடுகிறீர்கள்? அவரிங்கே இல்லை. எழுந்து போனார்.

7 முன்னே அவர் கலிலேயா நாட்டில் இருந்த காலத்திலே மனிதனுடைய குமாரன் பாவிகளான மனிதர் கைகளில் ஒப்புக்கொடுக்கப்படவுஞ் சிலுவையில் அறையப்படவும் மூன்றாம் நாளிலே திரும்ப எழுந்திருக்கவும் வேண்டுமென்று உங்களுடனே சொன்னதை நினைத்துக்கொள்ளுங்களென்றார்கள்.

8 அப்பொழுது அவர்கள் அவருடைய திரு வசனங்களை நினைத்து,

9 கல்லறையை விட்டுத் திரும்பி அந்தச் சங்கதியைப் பதினொருவருக்கும் மற்ற எல்லாருக்கும் அறிவி

திருந்தார்கள்?
அதை அப்போஸ்தலருடனே சொன்னவர்கள் 10
மகுதலா ஊராளாகிய மரியாளும் யோவன்னாளும்
யாக்கோபின் தாய் மரியாளும் இவர்களுடனே இ
ருந்த மற்ற ஸ்திரிகளுமே.
அவர்கள் சொன்ன வசனங்களை அப்போஸ்தலர் 11
கள் ஒரு கட்டுக்கதையைப் போல எண்ணி அவர்க
ளுடைய சொல்லை நம்பவில்லை.
ஆனாலும் பேதுரு எழுந்து கல்லறையினிடத்து 12
க்கு ஓடி அதற்குள்ளே பார்க்கக் குனிந்து சேலை
களைத் தனியே வைத்திருக்கக் கண்டு சம்பவித்திருக்
கிறதைக் குறித்துத் தன்னில் ஆச்சரியப்பட்டுக்
கொண்டுபோனான்.
அன்றியும் அன்றைத்தினமே அவர்களில் இரண்டு 13
பேர் எருசலேம்நகரத்துக்கு அறுபது ஸ்தாதி* தூ
ரமான எம்மாவு என்னும் ஊருக்குப் போனார்கள்.
(போகையில) அவர்கள் சம்பவித்திருந்த இக்கா 14
ரியங்கள் யாவையுங் குறித்து ஒருவரோடொருவர்
பேசிக்கொண்டார்கள்.
அப்படி அவர்கள் பேசி விசாரித்துக்கொள்ளு 15
கிற பொழுது இயேசுவானவர் தாமுஞ் சமீபமாகி
அவர்களுடனே கூட நடந்தார்.
அப்படியிருந்தும் அவரை அறியாதபடிக்கு அ 16
வர்களுடைய கண்கள் மறைக்கப்பட்டிருந்தன.
அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நீங்கள் 17
துக்க முகமுள்ளவர்களாய் வழிநடந்து ஒருவருக்
கொருவர் சொல்லிக்கொள்ளுகிற காரியங்கள் என்
னவென்றார்.
அதற்கு அவர்களில் ஒருவனாகிய கிலேயோப்பா 18

* அறுபது ஸ்தாதியென்பது ஏறக்குறைய ஐந்தாழிகை வழிதூரமிருக்கும்.

வென்பவன் சொன்னது, நீ மாத்திரமோ எருசலே
மில் இந்நாட்களிற் சம்பவித்தவைகளை அறியாத அ
ந்நியனாயிருக்கிறாயென்றான்.
19 அவர் எவை என்றார். அதற்கு அவர்கள் சொன்
னது, நாசரேத்தூரானாகிய இயேசுவைக் குறித்த
வைகளே. அவர் பராபரனுக்குஞ் சகல சனங்க
ளுக்கும் முன்பாகச் செய்கையிலும் வசனத்திலும்
வல்லமையுள்ள தீர்க்கதரிசியாய் இருந்தார்.
20 அப்படி இருந்தும் நம்முடைய பிரதான ஆசா
ரியருந் தலைவரும் அவரை மரண ஆக்கினைக்குட்படு
த்திச் சிலுவைமரத்தில் அறைந்தார்கள்.
21 இஸ்ரவேலரை மீட்பவர் அவரே என்று நாங்கள்
நம்பினோம். அவைகள் சம்பவித்தது இன்று மூ
ன்று நாளாகிறதே
22 எங்களிற் சில ஸ்திரிகள் அதிகாலையிலே கல்லறை
யினிடத்திற் போய் அவருடைய சரீரத்தைக் காணா
மல் திரும்பி வந்து,
23 அவர் உயிரோடிருக்கிறாரென்று சொன்ன தேவ
தூதரைத் தரிசித்தோமென்று சொல்லி எங்களைப்
பிரமிக்கப்பண்ணினார்கள்.
24 அப்பொழுது எங்களிற் சிலர் கல்லறையினிடத்
திற் போய் ஸ்திரிகள் சொன்னபடியே கண்டார்க
ள். அவரைக் காணவில்லையென்றார்கள்.
25 அப்பொழுது அவர் அவர்களுடனே சொன்ன
து, தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்
கிறதற்குப் புத்தியில்லாமல் மந்த இருதயமுள்ளவ
ர்களே?
26 கிறிஸ்துவானவர் பாடுபடவும் தமது மகிமைக்கு
ட் பிரவேசிக்கவும் வேண்டியதாயிருக்கிறதில்லையா
வென்று சொல்லி,
27 மோசேயுஞ் சகல தீர்க்கதரிசிகளுந் தொடங்கி

வேதவாக்கியங்கள் எல்லாவற்றிலும் தம்மைக் கு
றித்துச் சொல்லி இருக்கிறவைகளை அவர்களுக்கு வி
வரமாய்க்காண்பித்தார்.
அத்தருணத்திலே தாங்கள் போகிற ஊருக்குச் 28
சமீபமானார்கள். அப்பொழுது அவர் அப்புறம்
போக மனதைக் காண்பித்தார்.
அவர்கள் சொன்னது, சாயந்திரமாயிற்றே.பொ 29
ழுது போகின்றதே. ஆகையால் நீர் எங்களிடத்தி
ல் தங்கவேண்டுமென்று மிகவும் வேண்டிக்கொண்
டார்கள். அதன் பின்பு அவர் அவர்களிடத்திலே த
ங்கும்படி பிரவேசித்தார்.
அப்படி அவர்களுடனே பந்தியிருக்கையில் அவ 30
ர் அப்பத்தை எடுத்து ஆசீர்வாதஞ்சொல்லி அதை
ப் பிட்டு அவர்களுக்குக் கொடுத்தார்.
அப்பொழுது அவர்களுடைய கண்கள் திறக்கப் 31
பட அவரை அறிந்தார்கள்.
உடனே அவர் அவர்களுக்கு விலகினார். அப் 32
பொழுது அவர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி வழி
யிலே அவர் நம்முடனே பேசி,
வேதவாக்கியங்களை நமக்கு விளக்கமாய்க் காண் 33
பித்தபொழுது நமக்குள்ள இருதயம் அன்பாய்க்
கொழுந்துவிட்டு வளரவில்லையாவென்று சொல்லி
அந்நேரமே யெழுந்து எருசலேமுக்குத் திரும்பிப்
போய்ப் பதினொருவரும் அவர்களோடிருந்தவர்க
ளும் கூடியிருக்கக்கண்டு,
கர்த்தர் மெய்யாய் எழுந்திருந்து சீமோனுக்குத் 34
தரிசனையானாரென்று அவர்கள் சொல்லக்கேட்டு,
பின்பு வழியிலே நடந்தவைகளையும் அவர் அப்ப 35
த்தைப் பிட்கையில் தாங்கள் அவரை அறிந்துகொ
ண்டதையும் விவரித்துச்சொன்னார்கள்.
அப்படி அவர்கள் பேசிக்கொள்ளுகையில் யேசு 36

வானவர்தாமே அவர்களுக்குள்ளே நின்று உங்
களுக்குச் சமாதான சவுக்கியமுண்டாவதாகவென்று
அவர்களுடனே சொன்னார்.
37 அவர்கள் அவரை ஒரு ஆவியென்றெண்ணிக் க
லக்கமும் பயமும் அடைந்தார்கள்.
38 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி நீங்கள்
என்னத்திற்காகக் கலங்குகிறீர்கள்? என்னத்திற்காக
உங்கள் இருதயங்களிற் சந்தேகங்கள் எழும்புகின்ற
ன?
39 என் கைகளையுங் கால்களையும் பாருங்கள் நான்
தான் இருக்கிறேன். என்னைத்தொட்டுப் பாருங்க
ள். நீங்கள் காண்கிறபடி எனக்குமாமிசமும் எலு
ம்புகளுமுண்டாயிருக்கிறது போல ஒரு ஆவிக்கு
மில்லையே என்று சொல்லி,
40 கைகளையுங் கால்களையும் அவர்களுக்குக் காண்
பித்தார்.
41 அப்படியிருந்துஞ் சந்தோஷத்தினாலே அவர்க
ள் பின்னும் விசுவாசியாமற் பிரமிப்பாய் இருக்கிற
பொழுது போசனத்துக்கு ஏதாகிலும் இங்கே யு
ண்டாவென்றார்.
42 அப்பொழுது அவர்கள் பொரித்த மீன்கண்டத்
தையுந் தேன்கூட்டுத் துணுக்கையையும் அவருக்
குக்கொடுத்தார்கள்.
43 அவைகளை அவர் எடுத்து அவர்களுக்கு முன்
பாகப் பொசித்து,
44 பின்பு அவர்களுடனே சொன்னதாவது, மோ
சேயின் பிரமாணப்புத்தகத்திலேயுந் தீர்க்கதரிசன
ப்புத்தகங்களிலேயுஞ் சங்கீதப் புத்தகத்திலேயும்
என்னைக்குறித்து எழுதியிருக்கிற யாவும் நிறைவே
றவேண்டுமென்று நான் உங்களோடே இருந்த கா
லத்திலே உங்களுடனே சொல்லிக்கொண்ட சங்க

றின் இவைகளே என்று சொல்லி,
பின்பு வேதவாக்கியங்களை அவர்கள் அறிந்து 45
கொள்ளும்படி அவர்களுடைய மனதுக்குப் புத்தி
கொடுத்து அவர்களுடனே சொன்னதாவது,
இவ்விதமாய் எழுதியிருக்கின்றது. அல்லாமலு 46
ம் அந்தப்படியே கிறிஸ்து பாடுபடவும் மூன்றும்
நாளிலே மரித்தோரிலிருந்தெழுந்திருக்கவும்,
எருசலேந் தொடங்கிச் சகல தேசத்தாருக்கும்
அவருடைய நாமத்தினாலே மனந் திரும்புதலையும்
பாவமன்னிப்பையும் பிரசங்கிக்கவும் வேண்டியதா
யிருந்தது.
நீங்களே அவைகளுக்குச் சாட்சிகளாயிருக்கிறீர் 48
கள்.
பின்பு நான் என் பிதா வாக்குத்தத்தம்பண்ணின 49
தை உங்களுக்கு அனுப்புவேன். நீங்கள் உன்னத
த்திலிருந்துவரும் பெலனைப் பெற்றுக்கொள்ளுகி
றவரைக்கும் எருசலேம் நகரத்திலிருங்களென்றார்.
பின்பு அவர் பெத்தானியூர்வரைக்கும் அவர்களை 50
அழைத்துக்கொண்டுபோய்த் தம்முடைய கைகளை
யுயர்த்தி அவர்களை ஆசீர்வதித்தார்,
அவர்களை ஆசீர்வதிக்கையில் அவர் அவர்களை வி 51
ட்டுப் பிரிந்து பரமண்டலத்திற்கு எடுத்துக்கொள்
ளப்பட்டார்.
அப்பொழுது அவர்கள் அவரைத் தொழுதுகொ 52
ண்டு மிகுந்த சந்தோஷத்தோடே எருசலேம் நகர
த்துக்குத் திரும்பி,
இடைவிடாமல் தேவாலயத்திலே பராபரனைத் 53
துதித்து வாழ்த்திக்கொண்டிருந்தார்கள்.

முற்றிற்று.